Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, MAY 28, 2022

சனிக்கிழமை மே 28, 2022 | ஒளி: 08 கதிர்: 008 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE

## வரிசையில் நிற்காதீர்கள்




சமையல் எரிவாயு, அடுத்தவாரம் வரையிலும் சந்தைக்கு விநியோகிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ள லிட்ரோ நிறுவனம், ஆகையால், எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு அருகில் வரிசையில் நிற்கவேண்டாமென பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இந்தியாவும் ஜப்பானும் இலங்கைக்கு

# இணைந்து உதவி

### 3.5 பில். டொலரை இந்தியா வழங்கியுள்ளது

### ஜப்பான் இலங்கையின் சிறந்த நன்கொடையாளர்



பொருளாதார ரீதியில் கடுமையான நெருக்கடிக்குக் முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் இலங்கைக்கு இணைந்து உதவி செய்வதற்கு இந்தியாவும் ஜப்பானும் இணக்கம் தெரிவித்துள்ளன என த ஹிந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பான் டோக்கியோவில், நடைபெற்ற குவாட் உச்சி மாநாட்டுக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றிருந்தார். அந்த மாநாட்டுக்கு புறம்பாக, ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடாவை, மே.24 ஆம் திகதியன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அந்த சந்திப்பின் போதே, இணைந்து உதவுவதற்கு இருநாடுகளின் பிரதமர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்திருந்த ஜப்பானின் வெளிவிவகார அமைச்சு, இலங்கையின் நிலைமை குறித்து இரண்டு தலைவர்களும் விவாதித்திருந்தனர் என குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



21 இன் அதிகாரங்களை அனுபவிக்க

# ரணிலுக்கு தகுதி இல்லை

### பாராளுமன்ற கால எல்லையை குறைக்க வேண்டும்

தற்போது கொண்டுவரப்படவுள்ள 21 ஆம் திருத்தத்தில் வழங்கப்படும் அதிகாரங்களை அனுபவிக்கும் உரிமை தற்போதைய பிரதமருக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ இல்லை. எனவே ஓராண்டு காலத்திற்குள் மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும், புதிய அரசாங்கமும் பிரதமருமே 21 ஆம் திருத்தத்தின் அதிகாரங்களை அனுபவிக்க முடியும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வறுமையை தவிர்க்க முடியாது

■ ஆர்.யசி



வரலாற்றில் என்றும் இல்லாத அளவிற்கு 2022 ஆம் ஆண்டில் நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதை தவிர்க்க முடியாது எனவும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும் எனவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. அடுத்த ஆறு மாதங்களில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு சகல மக்களும் முகங்கொடுக்க நேரிடும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

அரசியல் மறுசீரமைப்பினூடாக

## ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்

### சபாநாயகரிடம் ஜூலி சங் எடுத்துரைப்பு



அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள புதிய பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தினால் முடியும் என தான் நம்புவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். அதேபோன்று மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## இந்திய புதிய முதலீடுகள் இலங்கைக்கு கிடைக்கும்

### ரணில் நம்பிக்கை: அடுத்த அமர்வில் விசேட உரை



இலங்கையின் பொருளாதார நிலைமைகள் ஸ்திரமடைந்த பின்னர் இந்தியாவின் புதிய முதலீடுகளின் மூலமாக புதிய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க இந்திய வர்த்தக நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதேபோல் நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து அடுத்த பாராளுமன்ற அமர்வில் விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ச்சி P2



# தோணியில் கடலுக்கு பயணித்த மீனவர் பலி

### மண்ணெண்ணெய் இல்லாமையால் நேர்ந்த அவலம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

கடலுக்கு மீன்பிடிப்பதற்காக, படகில் செல்ல வேண்டிய மீனவர்கள், சாதாரண தோணியில் மீன்பிடிக்கச் சென்றபோது, அந்தத் தோணி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், மீனவர் ஒருவர் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இன்னுமொருவர் உயிர் தப்பியுள்ள சம்பவம் காத்தான்குடியில் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலமுனை கடலுக்குச் செல்வதற்கான படகுக்கு தேவையான மண்ணெண்ணெய் இன்மையால், அவர்கள், சாதாரண தோணியில் பயணித்துள்ளதாக அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

நாட்டில் பாரிய மருந்து தட்டுப்பாடு

## அடுத்த ஆறுமாதங்களில் மிக மோசமான விளைவாம்

### மருத்துவ சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன; சர்வதேச உதவிகளையும் கோரியுள்ளன

■ ஆர்.யசி

நாட்டில் தற்போது நூறுக்கும் அதிகமான அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதாகவும், அடுத்த ஆறுமாத காலத்தில் இது நாட்டில் பாரிய தாக்கத்தை வெளிப்படுத்தப் போவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட மருத்துவ சங்கங்கள்,

தொடர்ச்சி P2




## விமலின் மனைவி சஷீக்கு 2 வருட சிறை

முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச எம்.பியின் மனைவிக்கு, 2 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்துள்ள கொழும்பு பிரதான நீதிமன்றம், ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் விதித்து நேற்று (27) தீர்ப்பளித்துள்ளது.

போலியான தகவல்களை முன்வைத்து, இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டார் எனச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டு நிரூபணமானதை அடுத்தே, அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## விமலின் மனைவி சஷீ மேன்முறையீட்டு கைதி

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு போலியான தகவல்கள் வழங்கி, இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட, முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவின் மனைவி சஷீ வீரவங்ச, தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து, தன்னுடைய சட்டத்தரணிகளின் ஊடாக, மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு சகல விதமான ஒத்துழைப்புகளை வழங்குவோம்

### இந்திய பிரதமர் நரேந்திர மோடி

மிகவும் கடினமான காலத்தை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையில் இலங்கையின் அபிவிருத்திக்கான பங்களிப்பு குறித்து கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எமது நெருங்கிய நட்பு நாடும்,

தொடர்ச்சி P2



## கச்சதீவை மீட்டெடுக்க இதுவே சரியான தருணம்

தமிழ் நாட்டு கடலோர மீனவர் சமுதாயத்தின் முக்கிய பிரச்சினைக்கு தீர்வு காணும் விதமாக கச்சதீவை மீட்டெடுத்து தமிழக மீனவ மக்களுடைய பாரம்பரிய மீன்பிடி பகுதியில் அவர்களின் உரிமையை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இணைந்து உதவி

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் நாட்டில் மனிதாபிமான நிலைமை மோசமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு இரண்டு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்பட இரண்டு தலைவர்களும் உடன்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ஜப்பான் இலங்கைக்கு, சிறந்த நன்கொடையாளர்கள் மற்றும் மேம்பாட்டு பங்காளராக அரை நூற்றாண்டுக்கும் மேலாக செயற்பட்டு வருகிறது.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய குவாட் உறுப்பினர்கள் வெளிநாட்டு உதவிக் கூட்டமைப்பை அமைப்பதில் முன்னணி வகிக்க வேண்டுமென இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்து இருந்தார்.

இந்நிலையில், இலங்கைக்கு உதவ இந்தியாவுடன் இணைந்து ஜப்பான் வெளியிட்ட அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து சுமார் 3.5 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வரிசையில்...

எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு, வந்துகொண்டிருக்கும் கப்பல், ஞாயிற்றுக்கிழமையன்று நாட்டை வந்தடையும். , கால அட்டவணையின் பிரகாரம் இறக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாயின், மே 30 திங்கள்கிழமை எரிவாயு விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

ஆனால், கடந்த சில நாட்களாக சமையல் எரிவாயு சிலிண்டர்களை எமது நிறுவனம் சந்தைக்கு விநியோகிக்கவில்லை. ஆகையால், அடுத்த வாரம் வரை புதிய இருப்புக்கள் வழங்கப்படாது என்பதுடன் எரிவாயுக்காக, வரிசையில் நிற்கவேண்டாமென்றும் வாடிக்கையாளர்களிடம் லிட்ரோ நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

## வறுமையை...

உள்நாட்டு வளங்கள் பற்றாக்குறைகள், அதிகரித்த உலகளாவிய பண்டங்களின் விலைகள், ஆண்டின் இதுவரை காலப்பகுதியிலும் அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பாரியளவிலான வீழ்ச்சி என்பவற்றுடன் இணைந்ததான ஏனைய பொருளாதார அழுத்தங்களின் விளைவாக அண்மைய காலத்தில்நாட்டில் பாரிய அளவிலான பணவீக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலை மேலும் சில மாதங்களுக்கு நீடிக்கும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும் எனக் கூறியுள்ள அவர்,

பல்வேறு முன்னணிக் குறிகாட்டிகளாலும் பிரதிபலிக்கப்பட்டவாறு தற்போது இடம்பெறுகின்ற பற்றாக்குறைகள், வலுசக்தி தொடர்புபட்ட சிக்கல்கள் மற்றும் சமூக ரீதியான பதட்டகரமான நிலை காரணமாக நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த நிலைமையை சமாளிக்க மேலும் சில காலம் தேவைப்படும். இவ்வாறான நிலையில் மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவும், உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்கவும் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

## ஜனநாயகத்தை...

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று (27) பாராளுமன்றத்தில் சந்தித்திருந்தார். விடயங்களை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை - ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன், பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும் பணிகளை பாராட்டிய அவர் பாரளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அவசியம் குறித்தும் கலந்துரையாடினார்.

இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்த ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கிவரும்பங்களிப்புக்குச் சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார். ஜூலி சங் அவர்கள் இந்நாட்டுக்கான ஐக்கிய அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டதை அடுத்து சபாநாயகருடன் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

## ரணிலுக்கு...

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று (27) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியிடம் இருந்து அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என கூறும்போது அது பல்வேறு தரப்பை சென்றடைகின்றது. அதில் முக்கியமாக பிரதமருக்கும் அதிகாரங்கள் பகிரப்படுகின்றன. பாராளுமன்றத்திற்கும் பகிரப்படுகின்றது. ஆனால் இப்போதுள்ள பிரதமர் மக்களினால் நிராகரிக்கப்பட்ட ஒருவர், அவருக்கு இந்த அரசியல் அமைப்பு திருத்தம் மூலமாக புதிய அதிகாரங்கள் கிடைக்கின்றன. ஆனால் அதனை அனுபவிக்கும் ஆணை அவருக்கு இல்லை. எனவே அவர் இந்த ஆசனத்தில் இருக்க தகுதியிலாதவர். எனவே இப்போதுள்ள பாராளுமன்றத்தின் கால எல்லையை குறைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவும்.

எனவே மேலும் ஒரு வருடத்திற்குள் இந்த பாராளுமன்றத்தின் கால எல்லையை கட்டுப்படுத்தி அதன் பின்னர் புதிய பாராளுமன்றம் மற்றும் பிரதமர் தெரிவு செய்யப்பட்ட வேண்டும். அவர்களுக்கே 21 ஆம் திருத்தத்தின் அதிகாரங்கள் கிடைக்க வேண்டும். இப்போதுள்ள பிரதமருக்கு 21 ஆம் திருத்தத்தின் அதிகாரங்கள் கிடைக்க முடியாது. எனவே புதிய மக்கள் ஆணைக்காக பாராளுமன்றத்தின் கால எல்லையை மட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

அத்துடன் 21 ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக கட்சி தாவினால் பாராளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட வேண்டும், ஜனாதிபதிக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், ஜனாதிபதிக்கு எந்தவொரு அமைச்சுப்பதவிகளையும் வகிக்க முடியாது , இரட்டை பிரஜாவுரிமை கொண்ட நபர்கள் அரசாங்கத்தில் எந்தவொரு முக்கிய பதவியிலும் அங்கம் வகிக்க கூடாது, அரசியல் அமைப்பு சபையினூடாகவே அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்பட வேண்டும், மக்கள் பிரதிநிதிகளின் சொத்து விபரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுகளுக்கு அமைய இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு விசாரணைகளை நடத்த முடியும் என்ற விடயங்களை உள்ளடக்கிய யோசனைகளை முன்வைத்துள்ளதாவும் அவர் கூறினார்.

## தோணியில் கடலுக்கு...

அவ்வாறு பயணித்துக்கொண்டிருந்த போது, வீசிய சுழல் காற்று காரணமாக கடலுக்குள் தோணி மூழ்கிவிட்டது. எனினும், இருவர் நீந்தி கரையேறியுள்ளனர்.

மரணமான குறித்த மீனவர் கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் பாலமுனையில் திருமணம் செய்து வாழ்ந்து வரும் 52 வயதானவர் ஆவார். அவருக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். எனத் தெரிவித்த காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அடுத்த ஆறுமாதங்களில்...

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலையில் ஏதேனும் சர்வதேச அமைப்புகளோ அல்லது நாடுகளோ தமக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

தற்போதுள்ள நிலைமையில் நாட்டில் பாரிய அளவிலான மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவும் , இதற்கு நாட்டின் அந்நிய செலாவணி இல்லாதமையே காரணமாக அமைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் இந்த நிலைமையில் எந்தவொரு நாடோ அல்லது அமைப்புகளோ இலங்கைக்கு மருந்து உதவிகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்வதாகவும் கூறியுள்ளனர்.

அடுத்த ஆறுமாத காலத்திற்குமான உடனடி மருந்துகள் தேவைப்படுவதாகவும், இருதய நோய்க்கான மருந்துகள், சிறுவர்களுக்கான மற்றும் கர்ப்பிணி தாய்மாருக்கான மருந்துகளுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், விசர்நாய் கடி, புற்றுநோய்க்கான மருந்துகள் உள்ளிட்ட மருந்துகள் கடந்த காலங்களில் இருந்தே கிடைக்கப்பெறவில்லை எனவும் கூறியுள்ள அவர்கள்,

தேசிய மருந்து உற்பத்தி நிறுவனங்கள் ஏதேனும் உதவிகளை மேலதிகமாக செய்ய முடியும் என்றால் அதற்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டும் எனவும், கடந்த காலங்களில் செய்ததை போன்று தேசிய மருந்து உற்பத்தி நிறுவனங்களை கட்டுப்படுத்தாது சுயாதீனமாக செயற்பட இடமளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். இதற்கிடையில், தேசிய மருந்தாக்கள் கூட்டுத்தாபனம் மருந்துகளை விரைவாக கொள்முதல் செய்து வருவதாகவும், தற்போது 100க்கும் அதிகமான அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## இந்தியா புதிய...

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து பிரதமர் விடுத்துள்ள அறிவிப்பில் இதனை கூறியுள்ளார், அவர் மேலும் கூறியுள்ளதானது,

இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடி நிலையை அடுத்து பல்வேறு நாடுகளின் உதவிகள் எமக்கு கிடைக்கின்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஜி 7 நாடுகள் மற்றும் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் ஒத்துழைப்புகளும் கிடைத்து வருகின்றன. எனினும் நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடும் வேலைத்திட்டம் ஒன்றினை முன்வைக்க வேண்டியுள்ளது. இதில் சகல தரப்பினரதும் ஆலோசனைகளை பெற்று எமக்கான பொதுவான வேலைத்திட்டம் ஒன்றினை முன்வைத்தால் அதற்கு பின்னர் பல உதவிகளை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ள பிரதமர்,

இந்தியாவுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்திய வர்த்தக நிறுவனங்கள் நேரடியாக எமக்கு உதவுவதாக தெரிவித்துள்ளனர். குறிப்பாக நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டவுடன் இந்தியாவின்புதிய முதலீடுகளின் மூலமாக புதிய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க தாம் தயராக உள்ளதாகவும் அவர்கள் வாக்குறுதியளித்துள்ளனர் எனவும் கூறியுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் இலங்கை மட்டுமல்ல மேலும் பல நாடுகள் இன்று பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனினும் இந்த ஆண்டு இறுதி வரையிலும் நாம் நெருக்கடி நிலைக்கு முகங்கொடுக்க நேரிடும். அதேபோல் தற்போதைய நிலைமை குறித்தும், இதுவரை நாம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் அடுத்தகட்ட சவால்கள் குறித்தும் அடுத்த பாராளுமன்ற அமர்வில் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## கச்சதீவை மீட்டெடுக்க...

இதுவே அதற்கு தகுந்த தருணமாகும் என்பதை பிரதமர் மோடி அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றேன் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் தமிழகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்தே அவர் இந்த கோரிக்கையை இந்திய மத்திய அரசுக்கு முன்வைத்துள்ளார்.

## விமலின் மனைவி...

தண்டத்தை செலுத்த தவறின், மேலும் 6 மாத சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்காக உத்தரவையும் கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீ ராகல பிறப்பித்தார்.

பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டு, எவ்விதமான சந்தேகமும் இன்றி, முறைப்பாட்டாளராக நிரூபிக்கப்பட்டுள்ளது என பிரதான நீதவான், தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செயற்பாட்டுக்கு ஆதரவு நல்கிய அரச அதிகாரிகளுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, தீர்ப்பின் பிரதியொன்றை அரச பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு கையளிக்குமாறு பிரதான நீதவான் கட்டளையிட்டார்.

அமைச்சரின் மனைவி என்ற அதகாரத்தை பயன்படுத்தியே இந்த இராஜதந்திர கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

ஒரு நாள் சேவையின் கீழே, இந்த கடவுச்சீட்டை, கருமப்பீடத்தின் ஊடாகவோ அல்லது மறைமுக வழிமுறையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு அவர் நடவடிக்கை எடுத்திருந்தார் என்றும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மன்றுக்கு எடுத்துரைத்தார்.

## இலங்கைக்கு சகல...

அயல் நாடுமாகிய இலங்கைக்கு இந்தியா சகல விதமான ஒத்துழைப்புகளையும் வழங்கும். குறிப்பாக நிதி உதவிகள், எரிபொருள், மருந்து, உணவு உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் சகல உதவிகளையும் பெற்றுக்கொடுப்போம் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பல்வேறு அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் தம்மாலான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளனர். குறிப்பாக இலங்கையில், வடக்கு , கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் மக்களுக்கு இந்த உதவிகள் சென்றடைந்துள்ளன. சகல விதத்திலுமான பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்புகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் தொடர்ச்சியாக இலங்கை மக்களின் ஜனநாயகம், இறையாண்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா ஒத்துழைப்புக்களை வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## விமலின்...

கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்கானாவலவிடமே, இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தனர்.

இந்த கோரிக்கையின் மீது அவதானம் செலுத்திய மேலதிக நீதவான் இந்த வழங்கை எதிர்வரும் 30ஆம் திகதி வரையிலும் ஒத்திவைப்பதற்கான கட்டளையை பிறப்பித்தார்.

சட்டத்தரணிகள் குழாம், தங்களுடைய வாடிக்கையாளரை, மேன்முறையீட்டு கைதியாக சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

அந்தக் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது. நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்தன் பின்னர், கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் இருந்து சிறைச்சாலைகள் பஸ்ஸில், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கு சஷீ வீரவன்ச அழைத்துச் செல்லப்பட்டார்.

பங்களாதேஷுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இலங்கை

பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட் தொடரை இலங்கை கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில், மிர்பூரில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை சிறிது நேரத்திலேயே முஷ்பிக்கூர் ரஹீமை 23 ஓட்டங்களுடன் கசுன் ராஜிதவிடம் இழந்தது.

பின்னர் லிட்டன் தாஸ், ஷகிப் அல் ஹஸனின் இணைப்பாட்டத்தால் இனிங்ஸ் நகர்ந்தபோதும் 52 ஓட்டங்களுடன் அசித பெர்ண்ணாண்டோவிடம் லிட்டன் தாஸ் வீழ்ந்ததுடன், தொடர்ந்து ஷகிப் அல் ஹஸனும் 58 ஓட்டங்களுடன் அசித பெர்ணாண்டோவிடம் வீழ்ந்தார். இதைத் தொடர்ந்து பின்வரிசை மொஷாடெக் ஹொஸைன், அசித பெர்ணாண்டோ(2)



விடம் விழ பங்களாதேஷ் சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது இரண்டாவது இனிங்ஸில் 169 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில், அசித பெர்ணாண்டோ 6, கசுன் ராஜித 2, ரமேஷ் மென்டிஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸில் 29 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.




இப்போட்டியின் நாயகனாக அசித பெர்ணாண்டோவும், தொடரின் நாயகனாக அஞ்சலோ மத்தியூஸும் தெரிவாகினர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 365/10

(துடுப்பாட்டம்: முஷ்பிக்கூர் ரஹீம் ஆ.இ 175, லிட்டன் தாஸ் 141 ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 5/64, அசித பெர்ணாண்டோ 4/93)

இலங்கை: 506/10

(துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் ஆ.இ 145, தினேஷ் சந்திமால் 124, திமுத் கருணாரத்ன 80, தனஞ்சய டி சில்வா 58, ஒஷாட பெர்ணாண்டோ 57 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 5/96, எபொடொட் ஹொஸைன் 4/148)

பங்களாதேஷ்: 169/10

(துடுப்பாட்டம்: ஷகிப் அல் ஹஸன் 58, லிட்டன் தாஸ் 52 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 6/51, கசுன் ராஜித 2/40, ரமேஷ் மென்டிஸ் 1/20)

போட்டியின் நாயகன்: அசித பெர்ணாண்டோ

தொடரின் நாயகன்: அஞ்சலோ மத்தியூஸ்



# ‘சவாலே சமாளி’

## பொருளாதார நெருக்கடிகள், இயற்கையின் சீற்றம்; இரண்டுக்கும் நடுவே....



ரஸீன் ரஸ்மின்
razeenrasmin87@gmail.com



‘வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான், உள்ளத்தின் உள்ளக் கெடும்’ என்பது திருக்குறளாகும். அதாவது, வெள்ளம் போல் துன்பம் பெருகி வருகின்ற போது, அறிவுடையவன் அதைப் போக்க நினைக்கும் அளவிலேயே, அத்துன்பம் இல்லாமல் ஓடிவிடும் என்பது மேற்படி திருக்குறளுக்கான விளக்கமாகும்.

இன்று எமது நாட்டைப் பொறுத்தவரை, மக்கள் துன்பத்திற்கு மேல் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். “இனிப் பேசுவதற்கு எதுவுமில்லை. இறைவன் பார்த்துக்கொள்ளட்டும்” என்று எல்லோரும் சொல்லி, தமது மனதை ஆறுதல்படுத்திக் கொள்வதையும் கேட்டிருப்பீர்கள்.

இலங்கை மகக்ளுக்கு பொருளாதார நெருக்கடி ஒருபுறம்; இயற்கையின் சீற்றம் மறுபுறம். இந்த இயற்கை சீற்றம், பொதுமக்களை மாத்திரமல்ல பரீட்சை எழுதும் பாடசாலை மாணவர்களையும் விட்டு வைக்கவில்லை.

செவ்வாய்க்கிழமை (24) புத்தளத்தில் திடீரென பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால், புத்தளம் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தொடர்ச்சியாக மழை சோவெனப் பெய்தது.

இதனால், புத்தளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட குடும்பங்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. முக்கியமாக, அன்றைய தினம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுத தயாராக இருந்த சுமார் 600 மாணவர்கள் வரை, மேற்படி வெள்ளப்பெருக்கால், பரீட்சை எழுதுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கி இருந்தார்கள்.

செவ்வாய்க்கிழமை பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, புத்தளம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட சாஹிரா தேசிய பாடசாலை, இந்து மத்திய கல்லூரி, சென். அன்றூஸ் மத்திய கல்லூரி ஆகிய மூன்று பாடசாலைகளும் வெள்ளத்தில் மூழ்கின.

இதனால், குறித்த பாடசாலைகளுக்கு சாதாரண தரப் பரீட்சை எழுத வருகை தந்த மாணவர்கள், பல சிரமங்களை எதிர்நோக்கினார்கள். எனினும், முப்படையினர் உள்ளிட்ட அதிகாரிகளுடைய சாதுரியமான நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பின் காரணமாக, குறித்த மாணவர்களை பாதுகாப்பான கட்டடத்திற்கு இடம்மாற்றி, பரீட்சையை எழுதுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், மின்சாரப் பிரச்சினை என, குரல்வளையை நெரிக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில், மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இம்முறை தோற்றுகின்றனர்.

தாய் சமையல் எரிவாயு பெற்றுக்கொள்ளவும், தந்தை மற்றும் சகோதரர்கள் எரிபொருள், மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளவும் வரிசையில் காத்து நிற்க, மறுபுறம் மின்சாரமும் மணிக்கணக்கில் தடைப்பட, பெரும் மன உளைச்சலுக்கு மத்தியில் பரீட்சைக்கு தோற்றும் போது, இயற்கையும் அந்த மாணவர்களுக்கு பெரிதும் நெருக்குவாரங்களை கொடுத்திருப்பது, அந்த மாணவர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும் அவர்கள் சளைத்துவிடவில்லை.

செவ்வாய்க்கிழமை 8.30 மணிக்கு மாணவர்கள் பரீட்சைக்காக செல்ல வேண்டும். ஆனால், அதிகாலை கடும் மழை பெய்த போது, பரீட்சை இடம்பெறுவதிலும் சிறிது தாமதம் ஏற்பட்டது. மாணவர்களின் வருகையும் காலை 10.30 மணிவரை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில், கீழ் வகுப்பறையில் பரீட்சைகள் நடத்துவதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், வகுப்பறைகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால், பாடசாலையின் மேல்மாடிப் பகுதியில் பரீட்சை எழுதுவதற்காக ஒழுங்குகள், ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

புத்தளம் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், புத்தளம் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், பெற்றோர்கள் ஆகியோருடன் முப்படையினரும் கூட்டாக இணைந்து, வெள்ளநீரில் இருந்து இயந்திர படகு சேவை மூலம் மாணவர்களை பாதுகாப்பாக கீழ் மாடி வகுப்பறையிலிருந்து மேல்மாடி வகுப்பறைக்கு அழைத்து சென்றனர்.

சாஹிரா தேசிய பாடசாலை, இந்து மத்திய கல்லூரி, சென். அன்றூஸ் மத்திய கல்லூரி ஆகிய மூன்று பாடசாலைகளிலும் வெள்ளத்தில் சிக்கிய மாணவர்கள், பரீட்சை கடமைகளுக்காக வருகை தந்த அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டவர்களை முப்படையினர், அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், பெற்றோர்கள், புத்தளம் நகர சபை ஊழியர்கள் உள்ளிட்டவர்கள் பரீட்சைகள் ஆரம்பிக்கும் போதும், பரீட்சை முடிவடைந்த பின்னரும் பாதுகாப்பான முறையில் பரீட்சை மண்டபங்களில் இருந்து வெளியேறுவதற்கு கூட்டாக நடவடிக்கை எடுத்தனர்.

அத்துடன், கடும் மழை காரணமாக, பரீட்சை எழுதுவதற்குச் செல்ல முடியாமல் அவதிப்பட்ட மாணவர்களுக்கு, புத்தளம் நகர சபை செவ்வாய்க்கிழமை விசேட போக்குவரத்து சேவைகளையும் முன்னெடுத்திருந்தது. புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக்கின் ஆலோசனையில், இரண்டு வாகனங்கள் இதற்கான போக்குவரத்து சேவைகளை முன்னெடுத்திருந்தன.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் பெய்த கடும் மழை காரணமாக, புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 5 ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 122 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

எனினும், இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்படவில்லை எனவும் , பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தத்தமது வீடுகளிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட புத்தளம் - மன்னார் வீதி, கடையார்குளம், நூர் நகர் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதிகளும் புத்தளம் பிரதேச சபைக்கு உட்பட்ட ரத்மல்யாய, அல்காசிமி சிட்டி, பாலாவி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும், வெள்ளநீர் புகுந்தமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.

அத்தோடு, புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக்கின் மேற்பார்வையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள், குடிநீர் என்பனவை வழங்கப்பட்டவை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

புத்தளத்தில், சிறிதளவு மழை பெய்தாலும், வெள்ளம் ஏற்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. இதனால்தான் சிறிய அளவில் மழை பெய்துகொண்டிருக்கும் போது, புத்தளம் நகர மக்களும் குளங்களை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களும் விழிப்படைந்து, தத்தமது வீடுகளில் உள்ள பொருட்களைப் பத்திரப்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டிய அவஸ்தை தொடர்கிறது.

சீரான வடிகாலமைப்பு வசதி இன்மையே, இவ்வாறு வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக சொல்லப்படுகிறது. அதிகளவிலான மழை பொழிகின்ற சந்தர்ப்பத்தில் நகர்ப்புறங்களில் வடிகால் அமைப்புகளில் நீர் தேங்குகின்றது. இதனால் கட்டடங்களின் இடைவெளியில் நீர் வழிந்தோட இடமில்லாமல் அவ்விடத்தில் தேங்கி, அதிக வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தி விடுகின்றது.

குறிப்பாக, புத்தளம் நகரம் மற்றும் நகரை அண்டிய தாழ்நிலப் பகுதிகள், தில்லையடி, ரத்மல்யாய உள்ளிட்ட பகுதிகள், இவ்வாறான வெள்ளப்பெருக்கு காரணமாக நீரில் மூழ்கிவிடுகின்றன.

இவ்வாறு, வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது, பொதுமக்கள் இடம்பெயர்தல், தொற்று நோய்க்கு ஆளாகுதல், போக்குவரத்து பாதிக்கப்படல் என மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாக முடங்குகின்ற நிலையும் காணப்படுகின்றது.

எனவே, முறையான வடிகாலமைப்பு வசதிகளை முன்னெடுப்பதன் ஊடாக, எதிர்காலத்தில் இவ்வாறான வெள்ள அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு, புத்தளம் நகர சபையும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதே ஆரோக்கியமாகும்.







மீனவர்களைக் காணாது

# ஏங்கும் கடல்மாதா



அ.அச்சுதன்



நாட்டில் டொலர் பற்றாக்குறை காரணமாக எரிபொருட்கள் இறக்குமதியை உரிய முறையில் மேற்கொள்ளமுடியாத நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நாடாளாவிய ரீதியில் மிக நீண்ட வரிசைகளில் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த பல வாரங்களாக வரிசைகள் நீண்டு கொண்டு செல்வதை காணமுடிகின்றது. சில இடங்களில் இரண்டு கிலோ மீற்றரையும் தாண்டி எரிபொருளுக்காக வாகனங்கள் உட்பட மீனவர்கள் பல இடங்களிலும் வரிசைகளில் நிற்பதை காணமுடிகின்றது. இது மக்களை மேலும் பாரியதொரு நெருக்கடி நிலைக்கும், விரக்தி நிலைக்கும் கொண்டு செல்லும் அபாயத்தை கொண்டிருக்கின்றது.

முக்கியமாக, மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது, கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் ஆழ்கடல், கரையோர மீன்பிடி நடவடிக்கைகள் பாதிப்படைந்து இருக்கின்றது. தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், சம்பூர் , இலங்கைத்துறை, கிண்ணியா, குச்சவெளி, சல்லி, திருகோணமலை நகர் மீனவர்களும் மண்ணெண்ணை, டீசல் தட்டுப்பாடு காரணமாக கடலுக்குச் செல்ல முடியாமல் அவர்களின் வாழ்வாதார மீதொழில் பாதிக்கப்பட்டு விரக்கதி நிலையில் காணப்படுகின்றனர்.

“தினமும் சுமார் 50 லீற்றருக்கும் அதிகமான மண்ணெண்ணை, டீசல் தேவைப்படும் நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சென்றால் மண்ணெண்ணை, டீசல் கிடைப்பதில்லை; ஏமாற்றுகிறார்கள். இதனால் ஆழ்கடலுக்கு இயந்திரப்படகு மூலம் செல்லமுடியாது. இதனை நம்பியே குடும்பத்தை நடத்துகின்றோம். எரிபொருள் தட்டுப்பாட்டால் தொழிலின்றி வாழ்வாதாரத்த இழந்துள்ளோம்” என்றும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இயந்திரப் படகுகள் எரிபொருள் இன்றி கூடுதலானவை கரையோரங்களில் நிறுத்திவைக்கபட்டுள்ளன. ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கபட்டு உள்ளதனால், மீன்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. 100க்கும் அதிமான மீன்பிடி படகுகள் கடலுக்கு செல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதை திருகோணமலை மாவட்டத்தின் கரையோரங்களில் காணமுடிகின்றது.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் குறைவடைந்து, நாடு வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கும் நிலைமையில், நாட்டின் பொருளாதார நெருக்கடி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது. மீனவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் கூட, இதுவரை அரசினால் மேற்கொள்ளப்படவில்லை என கரையோர மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் கடந்த ஒருவார காலமா,க கடல் மீனுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், பிடிக்கப்படும் மீன்களும் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அம்பாறையில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதனை நிறுத்திக்கொண்டதனால் கரைவலை மீனவர்களால் பிடிக்கப்படும் குறைவான அளவு மீனே இவ்வாறு சந்தைகளில் கூடிய விலைக்கு விற்கப்படுகின்றன.
இதேவேளை, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, ஆறு, குளம், குட்டைகளில் பிடிக்கப்படும் மீன்கள், இறால், கணவாய், கோழி முட்டைகள் போன்ற மச்ச உணவு வகைகள் கூடிய விலைக்கே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.


இன்றைய நிலையில், மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடலுக்கு செல்ல முடியாமல் ஐயாயிரம் வரையான நீண்ட நாள் படகுகள், துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதாக அகில இலங்கை நீண்ட நாள் படகு உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரூவன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நீண்ட நாள் மீன்பிடிப் படகுக,ள் மீனபிடி நடவடிக்கைகளுக்காக சர்வதேச கடற்பரப்புக்குச் சென்று மீண்டும் வர 45 நாள்கள் கடக்கின்றன. அதற்கமைய ஒரு பயணத்துக்காக 11 ஆயிரம் லீற்றர் டீசல் பயன்படுத்தப்படுவதாக நீண்ட நாள் படகு உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு ஒரு முறை 33ஆயிரம் லீற்றருக்கும் அதிகளவான டீசல், கடந்த காலங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் தற்போது திக்கொவிட்ட துறைமுகத்துக்கு 19ஆயிரம் லீற்றர் எரிபொருள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் அளவு இரண்டு படகுகளுக்கு கூட போதாது என அந்த சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக, கடும் அசௌகரியத்துக்கு உள்ளாகி ஒரு பயணத்துக்கு 11 இலட்சம் ரூபாய் மேலதிக செலவு ஏற்படுவதாகவும், இதேவேளை போதியளவு எரிபொருள் இன்மையால் தாம் பெறும் நெருக்கடிகளை சந்தித்திருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எரிபொருளின்றி கிழக்கு, வடக்கு உட்பட சகல மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மீன்பிடித்துறை பாரியதொரு நெருக்கடிக்குள் காணப்படுகின்றது. எனவே இவ்விடயத்தில் அரசு குறுகிய காலத்தில் தீர்வு காணவேண்டும்.





நாட்டில் இடர் களைய வேண்டி

# ‘இடர்களையும் பதிகம்’ பாடுவோம்



விபுலமாமணி
வி.ரி. சகாதேவராஜா

நாட்டில் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள இடர்களை களைய வேண்டி கோவில்களில், இடர்களையும் பதிகம் பாடும் பாரிய தேசிய திட்டமொன்றை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

சமய குரவர்கள் நால்வரில் ஒருவரான திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருநெடுங்களத்து கோவிலில் அன்றைய இடர் சூழ்ந்த காலத்தில் பாடிய திருநெடுங்களத்து இடர் களையும் பதிகத்தை, கோவில்களில் பாடும் போது, தற்சமயம் நாட்டில் சமகாலத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக எழுந்த இடர்கள் குறைய வாய்ப்புள்ளது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராவார். நாயன்மார்களின் புகழை, இந்து மாணவர்கள் மத்தியில் விதைப்பதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த சமூகமாக விளங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஏலவே, நாட்டில் நிலவிய கோரோனா தீநுண்மியின் தாக்கம் குறைய நாட்டில் உள்ள 126 கோவில்களில் மகா மிருத்யுங்ச மகா யாகங்களை பிரார்த்தனை வழிபாடு சகிதம் அதிகாலையில் செய்து வந்தது. இத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 56 ஆலயங்களில் சிறப்பாக நடைபெற்றது தெரிந்ததே . அதற்கு இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் பிரதான காரணமாக திகழ்ந்தார். அதற்கு உறுதுணையாக அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி உயிர்ப்பாக செயற்பட்டார்.

இந்த யாகத்தால் நாட்டில் நிலவிய கோரோனா தீநுண்மியின் தாக்கம் குறைய ஆரம்பித்தது. ஈற்றில் அது ஒழிந்து விட்டது.

அதுபோன்று, நாட்டில் சமகாலத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற இடர்களைக் களைய வேண்டி, கோவில்களில் இடர் களையும் பதிகம் பாடும் பாரிய தேசிய திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனின் ஒழுங்கமைப்பில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 108 கோவில்களில் இது நடைபெற்றுவருகிறது. இதன் முதல் நிகழ்வு ,அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்றுள்ளது.

இரண்டாவது நிகழ்வு பாண்டிருப்பில் நடைபெற்றது. மூன்றாம் நிகழ்வு மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (03) நடைபெற உள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி ஆலயமும், சித்தானைக்குட்டி அறநெறிப் பாடசாலையும் இணைந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையும், திருநெடுங்களத்தலத்து இடர் களையும் பதிகம் ஓதும் நிகழ்வும் ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது ஆலயத்தின் தலைவர் பொன்.பாலந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு உபதலைவர் க.தட்சணாமூர்த்தி, பொருளாளர் த.தவக்குமார், உபசெயலாளர் செ.விஜயரெத்தினம், நிர்வாகசபை உறுப்பினர்களான சீ. யோகராஜா, பி. பாஸ்கர், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவலோஜி சிவராஜா, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.

இரண்டாவது நிகழ்வு பாண்டிருப்பில் முத்துமாரியம்மன் கோவில் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் பூசை தொடர்ந்து திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரின் ஊர்வல பவனி (மாரியம்மன் ஆலயம் - மாரியம்மன் ஆலய சந்தி - திரௌபதி அம்மன் ஆலய முன்வீதி - கலாசார மத்திய நிலையத்தை அடைந்தது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் ஏ.ஜே. அதிசயராஜ், தலைமை சமுர்த்தி முகாமையாளர் க. இதயராஜ், ந. பிரதாப் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள். ஏற்பாடுகளை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.

இடர் களையும் பதிகத்தை கோவில்களில் பாடும் இச் செயற்பாடு வெற்றி பெற பிரார்த்திப்போமாக.







மலையக இலக்கிய வானில் மறக்கவொண்ணா நட்சத்திரம்

# கவிஞர் குறிஞ்சி தென்னவன்

**அன்னாரின் ஜனன தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**



க. வைஷ்னவி
(கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்
மலையக கலாசார ஒன்றியம், மாணவர் பிரிவு)

மலையக ஆக்க இலக்கியங்களும் ஆய்வுகளும் அந்தப் பகுதி மக்களின் வாழ்வியல் பற்றியதாகவே இருந்துள்ளன. மலையக தேசியவாதம் குறித்து, மலையக மக்கள் என்கின்ற பதத்தைச் சற்றுப் பரந்த கண்ணோட்டத்தில் நோக்கின், இந்நிலை நின்று மலையக இலக்கியத்தை ஆய்வு செய்வது, அறிஞர்களின் கடன். அத்தகைய இலக்கியத் துறையில் முக்கியமான கவி துறையில் தோன்றி சாதனை படைத்த ஒரு மலையக கவிஞர்தான் எஸ். வேலு எனப்படும் இயற்பெயரைக் கொண்ட ‘குறிஞ்சித் தென்னவன்’.

மலையக இலக்கிய வானில் மறக்கவொண்ணா நட்சத்திரமாக இவர் ஒளிர்கின்றார். இவர், சுப்பையா முருகம்மா தம்பதியினருக்கு நோர்வூட், தென்மதுரை தோட்டத்தில் 1934.03.12 ஆம் திகதி பிறந்தார். பின்னர் இவரின் பெற்றோர் நுவரெலியாவுக்கு அண்மையில் உள்ள லபுக்கலை தோட்டம் மேற்பிரிவிற்கு குடிபெயர்ந்தனர்.

லபுக்கலை தோட்ட பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்ற இவர், வறுமை என்ற பிணியில் தாக்கத்திற்கு உட்பட்டு, தொடர்ந்து கல்வி கற்க இயலாமல், தனது 11ஆவது வயதில் தோட்டத் தொழிலாளி எனும் பெயரை பதித்துக் கொண்டார்.

> **கவிஞரின் ஆயிரக் கணக்கான கவிதைகள், இன்னும் அச்சு வாகனம் ஏறாமல் உள்ளன. இந்தப் பணி முன்னெடுத்துச் செல்லப்படுமாயின் அது, சமூகத்துக்கும் கவிஞருக்கும் ஆற்றும் மிகப்பெரிய சேவையாகும்**

வாசிப்பின் மீது அதீத காதல் கொண்ட படியால், தனது பள்ளிப் பாடம் நின்று போனாலும், எப்படியாவது தமிழகத்து சஞ்சிகைகளையும் ஈழத்து சஞ்சிகைகளையும் கிடைக்கின்ற நூல்களையும் புராணங்களையும் வாசித்து, தனது தமிழ்ஆற்றலை வளர்த்துக் கொண்டிருந்தார்.

பின்னர், தனது 18ஆவது அகவையில் தனது கன்னி கவிதையை எழுதினார்; தனது கவிதை ஆற்றலை பரீட்சித்து பார்த்தார் என்றுகூடச் சொல்லலாம். 1960 களுக்குப் பின்னர்தான், தன்னை ஒரு கவிஞனாக அடையாளப் படுத்திக் தொடங்கினார் என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இவர் தோட்டத் தொழிலாளியாக இருந்த படியால், சக தொழிலாளர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடியவராக இருந்தார். ஏறக்குறைய 4,500 க்கும் மேற்பட்ட கவிதைகள் 1,000க்கும் மேற்பட்ட குறும்பாக்கள் என்பவற்றை எழுதியுள்ளார்.



பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் வெளிவந்த இவரது கவிதைகளில் பெரும்பாலும், தான் வாழ்ந்த சூழல்களையும் சோகங்களையும் பதிவு செய்திருக்கிறார்.

ஆயிரக்கணக்கான கவிதைகளை இவர் எழுதிய போதும், சில கவிதைகளே நூலுருவம் பெற்றுள்ளன. 1987இல் ‘குறிஞ்சித்தென்னவன் கவிதைகள்’ என்ற நூல் வெளிவந்தது. பின்பு அதே நூல், அவர் எழுதிய சில குறும்பாக்களையும் இணைத்துக் கொண்டு, மீண்டும் வெளிவந்தது.

2007ஆம் ஆண்டு சாரல் நாடனின் தொகுப்பில் ‘குறிஞ்சித்தென்னவன்கவிதைகள்’ அவரது இன்னும் சில கவிதைகளைத் தாங்கி வெளிவந்தது. இவரது கவித் திறனுக்கு அங்கிகாரம் கிடைக்காமல் போய்விடவில்லை. இவர் பல விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ளார். அதில் குறிப்பாக, 1996ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சால் வழங்கப்பட்ட ‘கலாபூஷணம்’ விருதை குறிப்பிடலாம். அதற்கு அடுத்த ஆண்டே (1997) அவர், புற்றுநோயின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவரது வாழ்க்கையில் சரஸ்வதியின் அருள் திகட்டத் திகட்ட கிடைத்திருந்த போதும், இலட்சுமியின் அருள் துளியும் கிடைக்கவில்லை என்றே கூறலாம். கடைசிவரை, வறுமையின் கோரபிடியில் இருந்து அவரால் வெளியே வரமுடியவில்லை; எதிர்த்துப் போராடவும் முடியவில்லை.

இடதுசாரிக் கொள்கையில் பிடிப்பு கொண்ட கவிஞரால், எவரிடமும் கையேந்த மனம் செல்லவில்லை. எனவே, அவரது கவிதைகள் மூலம், அவரை விட வேறு சிலரே பயனடைந்தனர். இவரை தனது நண்பர் என கொண்டாடும் சிலர், கவிஞரின் மரணத்தில் கூட கலந்து கொள்ளவில்லை என்பது தான் வேதனை.

கவிஞரின் மனைவி லட்சுமி, மகன் கார்த்திகேயன் பாலன், மகள்மார் தாமரைச்செல்வி, ஞான பிரியா ஆகியோர் இன்னும் வாழ்க்கை போராட்டத்தில் இருந்து மீள முடியாமல் தவிக்கும் நிலையில் உள்ளார்கள். இவர்களை மீளா துயரத்தில் ஆழ்த்திய கவிஞர் இறையடி எய்திய தினம் 1998.01.19 ஆகும்.

இவர், மகாகவி பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரை தனது ஞான குருவாக கொண்டு கவிபுனைந்ததால் இவர் ‘மலையகத்தில் வாழும் பாரதி’ என அழைக்கப்பட்டார். இவரின் மகன் கார்த்திகேயன், நுவரெலியாவில் ஒரு புத்தகக் கடையில் ஊழியராக வேலை பார்க்கிறார்.

‘1996ஆம் ஆண்டு எனது தாயார் மரணித்த போது, தனது உடம்பில் நோயின் வேதனை வாட்டிய போதும் அதனை வெளிக்காட்டாது, காரியங்கள் முடியும் வரை என்னுடன் ஆறுதலாய் இருந்தார். அவர் எனது தாயாருக்காக எழுதி தந்த இரங்கற்பா துரதிர்ஷ்டவசமாக எங்கோ தொலைந்துபோனது மிகவும் வேதனை அளிக்கிறது. காலத்தில் மறக்கக்கூடாத கவிஞர்’ என இவரை எஸ். இரவீந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சிறந்த கவிஞரின் ஆயிரக்கணக்கான கவிதைகள், இன்னும் அச்சு வாகனம் ஏறாமல் உள்ளன. எவராவது அதற்கு உதவ முன்வருவார்களா? அவ்வாறு உதவ முன்வந்து, அந்தப் பணி முன்னெடுத்துச் செல்லப்படுமாயின் அது, சமூகத்துக்கும் கவிஞருக்கும் ஆற்றும் மிகப்பெரிய சேவையாகும்.

கடன் குழியிலிருந்து இலங்கையை மீட்பதற்கான

# சில ஆலோசனைகள்



கலாநிதி அரவிந்த கோரள



(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஸ்கொட்லாந்தின் நிலப்பிரபுக்கள் தொடர்பாக மீண்டும் பார்ப்போம். அவர்கள் காலப்போக்கில் எவ்வாறு தங்கள் துரதிர்ஷ்ட நிலையிலிருந்து வெளியே வருவது என தெரிந்து கொண்டார்கள். தங்கள் கோட்டைகளை பொதுமக்களுக்காக திறந்தார்கள்; கோட்டைக்குள்ளே தேநீர் சாலைகளை திறந்தார்கள்; அங்கு விலைகூடிய தேநீரும் சிற்றுண்டிகளும் விற்பனை செய்யப்பட்டன. தோட்டங்களில் சில பகுதிகளை விற்று கோட்டை பராமரிப்பை மேம்படுத்தினார்கள்.

இதிலிருந்து இலங்கை கற்றுக் கொள்ளக் கூடிய பாடத்தைப் பற்றி யோசியுங்கள். இந்தக் கடன்களில் இருந்து நாளை காலையிலேயே எங்களுக்கு வெளியில் வர முடியும். எவ்வாறு?

இலங்கையின் சொத்துரிமை சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் உடனடியாக மீளச் செலுத்த வேண்டிய கடனுக்கு பதிலாக சில சொத்துகளை விற்பதன் மூலம்.

## 7. இலங்கை தனது கடன்களை மீளசெலுத்தாமல் விடுவது பொருத்தமானதா?

நிச்சயமாக இல்லை. சாதாரணமாக ஒரு தனிநபர் தனது கடனை மீளசெலுத்தாமல் விடும் போது, அவரது சொத்துகள் பலவந்தமாக விற்கப்படும்; அந்நபர் வங்குரோத்து நிலையை அடைவர். மீண்டும் அவர் கடன் பெறுவது நீண்ட காலத்திற்கு கடினம்.

ஆனால் இது இறைமையுள்ள நாட்டிற்கு சற்று வித்தியாசம். ஏன்? ஒரு நாடு தனது இறைமையை தவறாக பயன்படுத்தி பெற்ற கடனை மீளசெலுத்தாமல் விட முடியும். ஆனால் அதன் விளைவு? மற்றைய நாடுகள் நாட்டிற்கான பொருளாதார உதவிகளை நிறுத்தக் கூடும். வெளிஉலகிடம் இருந்து அந்நாடு தனிமைப்படுத்தப்படும்.

நாம் ஒன்றை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். பெற்ற கடனை மீளசெலுத்தாமல் விடுவது என்பது திருடுவதற்கு சமமானதாகும். கடன் வழங்கியவர்களிடமிருந்து பணத்தை திருடுவது என்பதே இதன் பொருளாகும். இதனால்தான் இது ஒரு சிறந்த யோசனை அல்ல. அத்தோடு கடன் வழங்கியவர்கள் இதை நீண்ட காலத்திற்கு மறக்க மாட்டார்கள்.

இப்போது நீங்கள் ஒரு நியாயமான கேள்வியை கேட்கலாம். "கடன் வழங்குபவர்கள் கடனை வழங்கும்போது பணத்தை உருவாக்குகிறார்கள் என்றும், அதனை மீளசெலுத்தும்போது அழித்து விடுவார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தீர்கள் அல்லவா? அவ்வாறாயின் கடனை மீளச் செலுத்தாமல் விடுவதில் பெரிய பிரச்சினை ஏதும் வர முடியாது அல்லவா?"

உண்மையிலேயே இது ஒரு நல்ல கேள்வி. கடனை வழங்கும்போது பணம் உருவாகிறது. கடனை மீளச் செலுத்தும்போது பணம் அழிக்கப்படுகிறது. உண்மை! கடன் பெற்றவர் கடனை மீளச் செலுத்தாத விடத்து கடன் வழங்கியவர் தனது சொந்தப் பணத்திலிருந்து கடன் தொகைக்கு சமமான பணத்தை அழிக்க வேண்டி ஏற்படுகிறது. இதனால்தான் அறவிட முடியாக் கடன் வங்கிகளுக்கு பாரதூரமான நட்டத்தை ஏற்படுத்துகின்றன. கடனை மீளச்செலுத்தாமல் விடுவது, கடன் தொகையை வங்கியிலிருந்து திருடுவது போல் ஆகும். இதனால்தான் இலங்கை இதை ஒரு போதும் செய்யக் கூடாது.

## 8. நாம் முன்னோக்கி செல்ல வேண்டுமானால் இலங்கையின் சொத்துகளை விற்க வேண்டுமா? சர்வதேச நாணய நிதியத்தின் பங்கு என்ன?

இலங்கையின் சொத்துகளை விற்பது உண்மையிலேயே ஒரு வழியாகும். மொத்தமாக இக்கடன் குழியிலிருந்து மீள 3 வழிகள் உள்ளன. இதில் எதிலேயும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது உள்ளடக்கப்படவில்லை.

முதலில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதைப் பற்றி பார்ப்போம். சர்வதேச நாணய நிதியம் என்பது ஒரு பொருத்தமான பெயர் அல்ல. ஏனெனில் இது உண்மையாகவே சர்வதேச நாணய நிதியம் ஆக இருந்திருந்தால் உலக நாடுகள் அனைத்தும் அதனை கட்டுப்படுத்துவதில் சம உரிமை கொண்டிருக்கும். இது உண்மையிலேயே ஒரு மேற்குலக நிறுவனம். இதன் பிரதான நோக்கம் மேற்குலக கடன் வழங்குநர்களை பாதுகாப்பதே ஆகும். இதனால் அவர்கள் நல்லவர்கள் அல்ல என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கம் தொடர்பாக நாங்கள் தெளிவாக அறிந்திருக்க வேண்டியது அவசியம். மேற்கத்திய ஊடகங்களில் சீனாவின் கடன் பொறி (debt trap) தொடர்பாக பலமாக பேசப்படுகிறது. ஆனால் கடன் என்பது சீனாவிடமிருந்தோ, இந்தியாவிடமிருந்தோ அல்லது மேற்குலக நாடுகளிடமிருந்தோ பெறப்பட்டாலும் அது பொறி தான். கடனை மீளசெலுத்த முடியாமல் போனால், கடன் பெற்றவரின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும். அவர் வங்குரோத்து நிலையை அடைவார். இது உண்மை.

இப்போது சீனா தொடர்பாகவும் மேற்குலக நாடுகள் தொடர்பாகவும் சற்று சிந்திப்போம்.

உங்களை ஆச்சரியப்படுத்தும் ஒரு சுவாரசியமான புள்ளி விவரத்தை இங்கு தருகிறேன். உலக நாடுகளின் செல்வ நிலைமை தொடர்பான மெக்கின்சி (Mckinsey) ஆய்வு தொடர்பாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அதன்படி, சீனா, செல்வ நிலைமையில் அமெரிக்காவை முந்தியுள்ளது. இதன்படி 2021இல் அமெரிக்காவின் நிகர சொத்து பெறுமதி 89 ட்ரில்லியன் அமெரிக்க டொலராக காணப்படுகிறது. சீனாவின் நிகர சொத்து பெறுமதி 201 ட்ரில்லியன் அமெரிக்க டொலராக காணப்படுகிறது. இது அமெரிக்காவின் சொத்துப் பெறுமதியை பார்க்க இரண்டு மடங்கிலும் அதிகம்.

இது, நாங்கள் யாரிடம் கடன் பெற வேண்டும் என சிந்திக்க வைக்கிறது அல்லவா? ஆனால், யாரிடம் கடன் பெற்றாலும், அதைத் திருப்பிச் செலுத்தத் தவறும்போது எமது நிலைமை கவலைக்கிடம் ஆகும். அதில், கடன் வழங்கிய நாடு, சீனா அல்லது அமெரிக்கா என்பது ஒரு பொருட்டல்ல.

இப்போது நாங்கள் சர்வதேச நாணய நிதியம் (அல்லது மிகப்பொருத்தமாக கூறுவதென்றால் மேற்குலக நாணய நிதியம்) தொடர்பாக பார்ப்போம். நாணய நிதியம் எங்களுக்கு செய்யக்கூடியது என்னவெனில், எங்களுக்கு கடன் வழங்கியவர்களிடம் கலந்துரையாடி கடன் மீள்கட்டமைப்பை மேற்கொள்ளும். இது நாங்கள் கடனை மீளச் செலுத்தும் காலத்தை நீட்டிப்பதற்கு வழிவகுக்கும் என்றால், அதை நாங்களே எங்கள் கடன் வழங்குநர்கள் இடம் நேரடியாக பேசிக் கொள்ளலாம். அதற்கு சர்வதேச நாணய நிதியம் தேவையில்லை

ஏனெனில். கடன் வழங்குநர்களின் உண்மையான ஆர்வம், தொடர்ந்து கடன் வழங்குவதன் மூலம் வட்டி வருமானத்தை பெற்றுக் கொள்வதே ஆகும். இவ்வாறுதான் வங்கிகள் பணத்தை உருவாக்குகின்றன. இப்போது எங்களை மீளச் செலுத்துமாறு அவர்கள் கட்டாயப்படுத்துவதன் காரணம், நாங்கள் எப்போதுமே கடனை மீளச் செலுத்தாமல் போய் விடுவோமோ என்ற அச்சமே. நாங்கள் நிச்சயமாக கடனை திருப்பி செலுத்துவோம் என்று கடன் வழங்குபவர்கள் நம்பும் பட்சத்தில், அவர்கள் எங்களிடமிருந்து மகிழ்வுடன் வட்டியை பெற்றுக்கொள்வார்கள்.

சர்வதேச நாணய நிதியம் எவ்வாறு எங்களுக்கு உதவுகிறது என்றால், கடன் வழங்குபவர்களிடம் கலந்துரையாடி, கடனில் ஒரு பகுதியை மீளச் செலுத்த தேவையில்லை என்கிற நிபந்தனைக்கு கடன் வழங்கியவர்களை சம்மதிக்க வைக்கிறது. இது ஓர் அனுமதிக்கப்பட்ட திருட்டு ஆகும். கடன் வழங்கியவர்கள் திருட்டை மிக நீண்ட காலத்திற்கு மறக்கமாட்டார்கள்.

இதனைச் செய்வதற்காக சர்வதேச நாணய நிதியம் பல கடுமையான நிபந்தனைகளை அரசாங்கத்தின் மேல் விதிக்கும். நிபந்தனைகளை அரசாங்கம் உள்நாட்டு பொருளாதாரத்தில் அமல்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். கடன் வழங்கியவர்களுக்கும் இலங்கைக்கும் இது ஒரு நல்ல நிலை அல்ல என்பதை உங்களால் விளங்கிக்கொள்ள முடியும்.

ஏனெனில் கடன் வழங்கியவர்கள் தங்கள் கடன் தொகையின் ஒரு பகுதியை நிரந்தரமாக இழக்க நேரிடும். இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை நாட்டில் அமல்படுத்த வேண்டி நேரிடும். இவ்வாறு இலங்கை மேற்குலக கடன் பொறியினுள் ஆழமாக பிடிபடும்.

### இப்போது நாட்டின் இறைமையை இழப்பது தொடர்பாக பார்ப்போம்.

இலங்கை தனது 400 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்தை விற்கவோ வாடகைக்கு விடவோ, விரும்பாமல் இருப்பது பைத்தியக்காரத்தனம் ஆகும்.

நிச்சயமாக சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு பொருத்தமான வழி அல்ல என்பதற்கு, இன்னொரு பெரிய காரணமும் உள்ளது. எங்கள் கடன் பிரச்சினையில் மூல காரணம் இலங்கையின் அந்நியச் செலாவணி பற்றாக்குறையாகும். ஆனால் இலங்கையில் வர்த்தக குறைபாடு மற்றும் நடைமுறைக் கணக்கு மீதியில் குறைவு என்பன இல்லாது இருந்திருந்தால், இலங்கை இக்கடன் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்திராது. குறிப்பாக, கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவால் 2020, 2021 ஆம் ஆண்டுகள் இலங்கைக்கு பாதகமாக அமைந்தன.

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கையின் கடன் பிரச்சினைக்கு ஒரு குறுகிய காலத் தீர்வைத் தர முடியுமே தவிர, எங்கள் வர்த்தக குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியாது. ஏனெனில், இலங்கை அந்நிய செலாவணியை வாங்கும் அளவிற்கு அதனை விற்பதில்லை. இதுதான் எங்கள் வெளிநாட்டு கடன் பிரச்சினைக்குரிய மூல காரணம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது இப்பிரச்சினைக்கு தீர்வாகாது. சர்வதேச நாணய நிதியம், அந்நிய செலாவணி குருதிப்பெருக்குக்கு ஒரு பிளாஷ்டிரை மட்டுமே இடும். ஆனால், அன்னியச் செலாவணி தொடர்ந்து குறைவடையும். சர்வதேச நாணய நிதியம், இன்னும் இரண்டு வருடங்களில், நாம் மேலதிக கடன் சலுகை கேட்டு தன்னிடம் வருவோம் என எதிர்பார்த்திருக்கும். இது ஒரு கடன் பொறி.

## 9. குறிப்பிட்டுள்ள மூன்று வழிகளிலும் சர்வதேச நாணய நிதியம் உள்ளடக்கப்படவில்லை இது சாத்தியமா?

நிச்சயமாக சாத்தியம். நாங்கள் இம்மூன்று வழிகளையும் பின்பற்ற வேண்டுமென்றில்லை. ஆனால் இம்மூன்று வழிகளும் வெவ்வேறு காலப்பகுதிகளில் செயற்படுத்தபடக் கூடியவை. அவையாவன:

இலங்கை சொத்துரிமை சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருதல்

இலங்கையின் சொத்துகளை விற்பனை செய்தல்

சரியான தொழிற்றுறை கொள்கை ஊடாக, எங்கள் வர்த்தக குறைபாட்டை நிவர்த்தி செய்தல்.

இவற்றில் முதலாவது மிக விரைவாக செய்யப்படக்கூடியது. ஆனால், அரசியல் ரீதியாக மிகவும் கடினம். சட்டத்தின் மூலம் எங்கள் வெளிநாட்டு கடன்களுக்கான பிணை உறுதி செய்யப்படும் இடத்தில், (அதாவது மிகவும் உறுதியான, எதிர்வரும் அரசாங்கங்களால் மாற்றம் செய்ய முடியாத சட்டம்), கடனை மீளச் செலுத்துமாறு எங்கள் மீதுள்ள அழுத்தம் உடனடியாக குறையும்.

ஏனெனில் கடன் வழங்குபவர்கள் கடன் கொடுப்பதன் மூலமே பணத்தை உருவாக்குகிறார்கள். கடன் பெற்றவர் தொடர்ச்சியாக வட்டி கட்டும் இடத்திலும், கடன் பெற்றவர் கடனை செலுத்தாமல் விடக்கூடும் என்ற பயம் இல்லாத இடத்திலும், கடன் வழங்குநர்கள் கடனை மீளப்பெற அவசரம் காட்டுவது இல்லை.

அமெரிகாவின் 22 பில்லியன் டாலர் பெறுமதியான வெளிநாட்டு கடனை நினைத்து பாருங்கள். இது ஐக்கிய அமெரிக்கா அரசாங்கத்தின் கடன் மட்டுமல்ல, அமெரிக்க நிறுவனங்களின் கடன்களும் கூட.

எப்போது அமெரிக்கா தனது கடன்களை மீளச் செலுத்தும்? உண்மையில் எப்போதும் இல்லை. இக்கடன்களை மீளச் செலுத்துவதற்கு எந்த ஒரு திட்டமும் இல்லை. ஆனால் வெளிநாட்டவர்கள் அமெரிக்காவுக்கு தொடர்ந்தும் கடன் வழங்குவார்கள். ஏனெனில், கடன் பெற்று அமெரிக்க நிறுவனம் கடனை மீளச் செலுத்த தவறும் இடத்து, அதன் சொத்துகளை கடன் வழங்கிய வெளிநாட்டு நிறுவனம் கைப்பற்றி, விற்பனை செய்து கொள்ளும். இதன் விளக்கம், அமெரிக்கர்கள் கடனை திருப்பி செலுத்துவதில்லை என்பது இல்லை. ஆனால், ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவின் மொத்த கடன் தொகை அதிகரித்த வண்ணமே உள்ளது. வெளிநாட்டு நிறுவனங்கள் திருப்தியுடன் அமெரிக்காவுக்கு கடன் வழங்குகிறார்கள். ஏனெனில் அமெரிக்காவிடமிருந்து அவர்கள் தொடர்ச்சியாக வட்டியை பெறுகிறார்கள். அமெரிக்க நிறுவனங்களுக்கு கொடுத்த கடனை எந்நேரமும் மீள பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் இடம் உள்ளது.

வளர்ச்சி அடைந்த நாடுகள் ஒவ்வொரு வருடமும் புதிதாக கடன்களை பெறுகின்றன. அவ்வாறு பெறுகின்ற கடன்களே பொருளாதாரத்தில் கனமாக மாறுகின்றன. வளர்ந்த நாடுகள் தங்கள் கடன்களை எப்போதாவது கட்டுப்படுத்தினால் உலக பொருளாதாரத்தில் பாரிய deflation ஏற்படும். இது சற்று பைத்தியக்காரத்தனமாக தோன்றலாம். ஆனால் இதுதான் உண்மை.

கடந்த சில வருடங்களாக மேற்குலக வங்கிகளில் அதிக கடன்களை உருவாக்க முடியாது போனது. இதனால் மத்திய வங்கிகள் நாணயங்களை அச்சடிக்க வேண்டி ஏற்பட்டது. இது Quantitative easing எனப்படும்.

மேற்குலக செல்வந்த நாடுகளின் இந்த நிலைமையில் இருந்து இலங்கை தூரத்திலுள்ள போதும், இலங்கையால் அந்த வகை பண உருவாக்கத்தில் நுழைய முடியும் (pool of money creation).

எவ்வாறெனில், இலங்கை ரூபாயை முற்றுமுழுதாக conversible ஆக மாற்றுவது.

சொத்துரிமை சட்டத்தை வெளிநாட்டவருக்கும் பொதுவாக்குவது.

இதை நாங்கள் செய்வோம் என்றால், நாளையே எமது கடன் பிரச்சினை மாயமாக மறைந்துவிடும்; நிரந்தரமாக மறைந்துவிடும். இரண்டாவதாகக் குறிப்பிட்டதை மட்டும் நாம் செய்தால் கூட, எங்கள் உடனடி பிரச்சினையான கடன் மீளச் செலுத்துவதில் இருந்து நாம் விடுபடலாம்.

கடன் வழங்குபவர்கள் எங்களிடமிருந்து வட்டியை மகிழ்ச்சியுடன் பெறுவார்கள். ஏனெனில், அவர்களுக்குத் தெரியும் அவர்களது முதல், பாதுகாப்பாக உள்ளதென்று. அத்தோடு அவர்கள் இலங்கை புதிதாக உலகின் திறந்த பொருளாதாரத்தினுள் நுழைகிறது என்பதை விளங்கிக் கொள்வார்கள். இது இலங்கையின் தற்போதைய 400 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகளை மிக விரைவாக அதிக பெறுமதியானதாக மாற்றும். இது ஒரு மிக ஆரோக்கியமான (virtuous) பொருளாதார வட்டம்.

## 10. "நீங்கள் குறிப்பிட்டுள்ள மூன்று வழிகளிலும் சர்வதேச நாணய நிதியம் அமெரிக்க டொலர்களை செலவு செய்தது உள்ளடக்கப்படவில்லை. இது சாத்தியமா?"

ஆம்! இன்னொரு மாற்றுவழி என்னவெனில் இலங்கையின் ஸ்கொட்லாந்து, கோட்டை போன்ற சொத்துகளின் சில பகுதிகளை விற்பது. உதாரணமாக, இலங்கையின் அழகான கடற் பிரதேசம் ஒன்றை ஒரு பாரிய வெளிநாட்டு சுற்றுலா விடுதி சங்கிலி ஒன்றுக்கு விற்பனை செய்வது. அதை அபிவிருத்தி செய்யும் முழு சுதந்திரத்தையும் அவர்களுக்கு வழங்குவது. இலங்கை Port city இல் நிலத்தை விற்க முடிவு செய்துள்ளதாக அறிகிறேன். இது மிகவும் சரியான முடிவு. இதனை நாங்கள் மிக விரைவாக செய்ய வேண்டும். 'நாளைய பொருளாதாரம்' (Economy next) என்ற சஞ்சிகையின் தகவலின் அடிப்படையில், ஒரு 20 plot நிலப்பரப்பின் விலை ஐந்து பில்லியன் டொலராக கணிக்கப்பட்டுள்ளது.

Port city பற்றி சற்று ஆராய்வோம். இது தொடர்பாக பல தேவையற்ற செய்திகள் பரவியுள்ளன. உதாரணமாக, இது ஒரு சீனக் கடன் பொறி; பணவிரயம் போன்றன. பின்வரும் தகவலை சற்று பாருங்கள். காணியை சுவீகரிக்கும் திட்டத்திற்கு இலங்கை 0.9 அமெரிக்க டொலரை செலவு செய்தது. ஒன்றின் முடிவில் ஐந்து மில்லியன் டொலர் பெறுமதியான காணி Port city இல் உருவாகியுள்ளது. அடுத்த விற்பனை வருமானம் 15 பில்லியன் டொலராக கணிக்கப்படுகிறது.

இத்திட்டம் தொடர்பாக குற்றம் சுமத்தும் அனைவரிடமும் கேட்க விரும்புவது, உங்களில் எவ்வளவு பேர் ஒரு டொலரை முதலீடு செய்து, சில வருடங்களில் 15 டொலரைப் பெற்றுள்ளீர்கள்? இது ஓர் அற்புதமான திட்டம். அத்தோடு அரசாங்கத்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். சிலர் இது தனியார் நிறுவனங்களால் செய்யப்படக்கூடிய திட்டம் என்கிறார்கள். இவ்வாறு ஒரு தனியார் நிறுவனம் இலங்கையின் கடற்கரையில் ஒரு தீவை அரசின் துணையின்றி செய்ய முடியுமா?

Port city இல் உருவாக்கப்படும் சொத்து மதிப்பு 100 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாகும். அத்தோடு இதை எங்களால் மீண்டும் மீண்டும் செய்ய முடியும்.

இதன் இன்னொரு முக்கிய அம்சம் யாதெனில், அதில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில், சொத்துரிமை சட்டங்களையும் அமைக்க முடியும். இலங்கை வெளிநாட்டவர்களுக்கான சொத்துரிமைச் சட்டங்களில் நாடு முழுவதும் மாற்றங்களை கொண்டுவர விரும்பாமல் இருக்கலாம். ஆனால், Port city இனுள் வெளிநாட்டவர்களுக்கான சொத்துரிமையை சட்டத்தின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.

## 11. இலங்கையில் நிரந்தரமான வர்த்தக குறைபாட்டை(trade deficit) நிவர்த்தி செய்வது எவ்வாறு?

இலங்கை மக்கள் வளர்ச்சியடைந்த நாடுகளைப் போல, ஒரு நல்ல வாழ்வை வாழ விரும்புகிறார்கள். அதில் எந்தத் தவறும் இல்லை. எங்களுக்கு iPhone அல்லது ஒரு மெர்சிடிஸ் பென்ஸ் காரையோ வாங்க வேண்டுமென்றால், அதை நாங்கள் வாங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஆனால், அதில் உள்ள பிரச்சினை என்னவெனில் ஒரு நாடாக, நாங்களும் ஏனைய நாடுகளுக்கு பொருட்களையும் சேவைகளையும் விற்க வேண்டும். இல்லாதவிடத்து வர்த்தக குறைபாட்டை(trade deficit) சந்திக்க நேரிடும். நடைமுறை கணக்கில் எப்போதும் எதிர்மறை (Negative balance) மீதியே காணப்படும். இதுதான் நிரந்தரமான அன்னியச் செலாவணி பற்றாக்குறை பிரச்சினை. இங்குதான் இலங்கை இப்போது உள்ளது.

இலங்கையின் நடைமுறைகளுக்கு மீதியில், நாங்கள் செலவிடும் அந்நியச்செலாவணி அளவு நாங்கள் பெற்றுக் கொள்ளும் அன்னியச் செலாவணி இன் அளவிலும் பார்க்க பல மடங்கு அதிகமாக உள்ளது. இதனால்தான் இறக்குமதிகளுக்கு நாங்கள் அன்னியச் செலாவணியை கடனாகப் பெற வேண்டியுள்ளது. இவ்வாறு தொடர்ந்து செய்ய முடியாது. ஏனெனில் நாட்டின் கடன் தொகை மேலும் மேலும் அதிகரித்த வண்ணமே காணப்படும்.

வர்த்தக குறைபாட்டை நிவர்த்தி செய்வது சுலபமான காரியமல்ல. அத்தோடு இதற்கு காலம் தேவை. வெளிநாட்டவர்களுக்கான சொத்துரிமைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவது போன்ற பொருளியல் பொறி முறைகளுக்கு குறுகிய காலம் போதுமானது.

அரசாங்கம், நாங்கள் அரிசியிலும் மஞ்சளிலும் தன்னிறைவு காண வேண்டும் என கருதுகிறது. இது பைத்தியக்காரத்தனம். நாங்கள் அந்நிய செலாவணியில் தன்னிறைவு காண வேண்டும். இதுவே உண்மை. இது நடந்தால் மெர்சிடிஸ் பென்ஸ் கார் அல்லது அரிசி அல்லது தேவையான அளவு மஞ்சளை நாம் வாங்க முடியும்.

ஸ்காட்லாந்து நாட்டின் பிரபல பொருளியல் எழுத்தாளர் அடம் ஸ்மித் தனது Wealt of Nations என்ற நூலில் (1776ஆம் ஆண்டு), உலக நாடுகள் தங்களது ஒப்பீட்டு அனுகூலத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனக் கூறுகிறார். நாங்கள் அவரிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிங்கப்பூர் அவ்வாறான ஒரு நாடு. சிங்கப்பூரின் நடைமுறை கணக்கில் கடந்த 30 ஆண்டுகளாக அவர்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20 சதவீதமான தொகை நேர்மீதியாக இருந்துவருகிறது. எப்பொழுது நடைமுறைக் கணக்கு மீதி தொடர்ச்சியாக நேர் மீதியை காட்டுகிறதோ, அப்போதுதான் உண்மையான இறைமை உங்களுக்கு கிடைக்கும். ஏனெனில் அப்போது நீங்கள் வெளிநாட்டு கடன் தொடர்பாக கவலை கொள்ளத் தேவையில்லை. இது நீங்கள் கடன் பெறத் தேவையில்லை என்று பொருள் தராது. உதாரணமாக சிங்கப்பூர் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 501% வெளிநாட்டு கடன்களை கொண்டுள்ளது. ஆனால் இக்கடன் அதன் பாதுகாப்பான 3.3 ட்ரில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகளின் பாதுகாப்பில் உள்ளது.

எப்படி நாங்கள் சிங்கப்பூராக மாறுவது? இலங்கை, உலகம் விரும்பும் பொருட்களை விற்க வேண்டும். தேயிலை, இறப்பர், தென்னை மட்டும் இதற்கு போதாது.

## 12. இலங்கைக்கான ஒரு தொழில் கொள்கையை உருவாக்குதல்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பொருத்தமான தொழில் கொள்கையே இலங்கையின் நிரந்தர அந்நிய செலாவணி பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். மேற்குலக நாடுகள் இதற்கு எதிராக வாதாடுகின்றனர். அதாவது, அரசாங்கம் தொழில் துறைகளில் இருந்து சற்று விலகி இருக்க வேண்டுமென்றும் தனியார் நிறுவனங்கள் தொழில்துறை முன்னேற்றங்களை கொண்டுவரவேண்டும் என்றும் மேற்குலகம் கூறுகிறது.

(அடுத்த வாரம் தொடரும்)

தமிழாக்கம்: டொக்டர் வைதேகி ரஜீவன் பிரான்சிஸ்

# நல்லநேரம் வரும் வரையிலும் காத்திருப்பதற்கு இது நேரமல்ல

அடுத்தது என்னவென சதாகாலமும் பலரும் புலம்பிக்கொண்டிருப்பதை கேட்கக்கூடியதாய் இருக்கிறதே தவிர, மாற்றுவழிகளைப் பற்றி ஒருசிலரைத் தவிர ஏனையோர், சிந்திப்பதே இல்லையென்றால் அது அச்சொட்டாக சரியானதாய் இருக்கும். வழியொன்று மூடப்பட்டிருக்குமாயின் மாற்றுவழிகளில் பயணித்து, செல்லவேண்டிய இடத்துக்குச் சென்றுவிடவேண்டும்.

வழி மூடப்பட்டுவிட்டதால் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டு விட்டோமென நினைத்துக்கொண்டிருப்பது காலத்தையும் நேரத்தை வீணடிக்கும் செயலாகும். 'மாற்று சிந்தனை' ஒவ்வொருவிடத்திலும் தோன்றவேண்டும். எமது நாடு முகங்கொடுத்திருக்கும் இந்தப்பிரச்சினையால் பல தொழில்கள் முற்றாக முடங்கிவிட்டன.

சிலவற்றுக்கு மாற்று முறைமை உள்ளது. பலவற்றுக்கு அது கிடையாது. மிகச்சரியான மாற்று முறைமைகளை கையாளாவிடின், உயிரிழப்புக் கூட ஏற்பட்டுவிடும். ஆகையால், ஒன்றுக்கு பலமுறை சிந்திப்பதே சிறந்ததாகும்.

ஒவ்வொருடைய வீடுகளில் இருக்கும் சிறு இடத்தில், ஏதோவொரு மரக்கறியை வளர்த்தெடுத்தால், சிறிய குடும்பம் ஒன்றுக்கு ஒருவேளைக்குத் தேவையான மரக்கறிகளை பெற்றுக்கொள்ளலாம். அது சதாகாலமும் மரக்கறி சந்தையில் தங்கி வாழ்வதைத் தவிர்க்கும். அதனை வழக்கப்படுத்திக்கொண்டால், விளைச்சலை அதிகரித்துக்கொண்டே போகலாம்.

பெரும் நகரங்களில் வாழ்வோரும், அடுக்குமாடிகளில் வாழ்வோரும் ஆகக் குறைந்தது ஒரு பூச்சாடியையேனும் வைத்திருப்பர். அதில்கூட, ஆய்ந்துக்கொள்ளும் அளவுக்கு சிறிய மரக்கறியை வளர்த்தெடுக்கலாம். பிரதான மரக்களுடன் இணை மரக்கறியாக பயன்படுத்திக்கொள்ள முடியும். கொரோனா காலத்தில் நாடு மூடப்பட்டிருந்த காலங்களில், பலரும் இவ்வாறான முறைமைகளில் முயன்று வெற்றி கண்டுள்ளனர்.

மாற்று சிந்தனையானது எல்லாவற்றுக்கும் சரிப்பட்டுவராது. உதாரணமாக, காத்தான்குடியில் பாலமுனை கடலில், மீன்பிடிப்பதற்காக படகில் செல்லவேண்டிய மீனவர்களில் சிலர், சாதாரண தோணியில் பயயணித்தபோது, அந்தத் தோணி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதனால், ஒருவர் மரணித்துள்ளார். கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மாற்று வழியே இல்லை. இப்படி சில தொழில்களை கூறலாம்.

மீன்பிடிப்பதற்குப் போதுமானளவு மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொடுத்தால், மீன்களின் விலை குறையும். சாதாரண மக்களும் மீன்களைக் கொள்வனவு செய்து, சமைத்து உண்ணமுடியும். தேவையான அளவுக்கு கிடைக்காவிடினும், ஓரளவுக்கேனும் புரதம் கிடைக்கும்.

"பஞ்சத்தால் தெருக்களில் மக்கள் செத்து மடிவார்கள்" என முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்கவின் கூற்று மெய்ப்பிக்கக்கூடாது. அக்கூற்றை பொய்ப்பிக்க வேண்டுமாயின், ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். கையேந்துவதை ஓரங்கட்டிவிட்டு, உழைப்பை கையிலெடுக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் நினைத்தால் முடியாதது ஒன்றுமே இல்லை என்பதால், இன்றிலிருந்தாவது ஒவ்வொருவரும் முயற்சி செய்யுங்கள். எல்லாவற்றையும் கொள்வனவு செய்யமுடியாத நிலைமையொன்று வெகு விரைவில் ஏற்படக்கூடுமென ஆரூடம் கூறப்பட்டுள்ளது.

ஆகையால், நல்லநேரம் வரும்வரையில் காத்துக்கொண்டிருக்காமல், எந்நேரமும் நல்லநேரமென நினைத்து, ஆரம்பப் புள்ளியை வையுங்கள் என்பதே எமது தாழ்மையான யோசனையாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

கடவுளிடம் கோரிக்கை வைத்து வழிபட்டவர்கள், அவை கிட்டினால், கடவுள் அனுக்கிரகம் கேட்டவண்ணம் கிடைத்துவிட்டது எனத் திருப்திப்பட்டுக் கொள்வார்கள். அத்துடன் ஆத்மிகத்தின் மீதும் நம்பிக்கை கொள்வார்கள்.

இதே நபர்கள் ஏதாவது பெரும் பதவிகள் வேண்டும்; உடனடியாகப் பணம் தேவை எனக் கடவுளிடம் கேட்டு, அது கேட்டபடி உடன் கிடைக்காது விட்டால், நாஸ்திகம் பேச ஆரம்பித்துவிடுவார்கள்.

கொடுத்த கடனை உடனே தா என்பதுபோல், இறைவனிடம் கேட்பதில் ஏது பக்தி இருக்கிறது? பக்தி நெகிழ்ச்சியுடன் அமைய வேண்டும். கடவுளிடம் கேட்பது எமக்கான அன்பினூடாக வருவதாகும். தந்தால்த்தான் வணங்குவேன் என எண்ணுதல் ஆகாது. எமக்கு என்ன வேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும். அர்ப்பணிப்பு, முயற்சி ஊடாகவே, பயன்கள் உண்டாகின்றன. இத்தகையவர்களை இறைவன் ஆசீர்வதிக்கின்றான். சகலரையும் இரட்சிப்பவருக்கு மக்களிடத்தில் பேதம் இல்லை. உலகம் சமநிலையில் இயங்க, ஆத்மிக உணர்வு தேவையானது. தெய்வ பக்தி மனதை அமைதிப்படுத்துகின்றது. இதனால், அமைதியூடாகவே சமாதானத்தைப் பெறமுடியும். அமைதி மகாசக்தி வாய்ந்ததாகும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் முட்கொம்பன் கிராமத்துக்கான போக்குவரத்து சேவைகள், எரிபொருள் விலையேற்றம் காரணமாக நிறுத்தப்பட்டு உள்ளதால், பிரதேச மக்கள், மாணவர்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முட்கொம்பன், செக்காலை மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கண்ணகை புரம் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள், கடந்த காலங்களில் இல்லாத நிலையில், மக்களின் தொடர் கோரிக்கை காரணமாக, குறிப்பிட்ட கிராமங்களுக்கு இரண்டு பஸ் சேவைகள் இடம்பெற்று வந்த நிலையில், தற்போது எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, குறித்த இரண்டு பஸ் போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், மேற்குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள், தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தேவைகளை நாடி வெளியிடங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமையிலும், இவ்வாறு பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளமையால், குறித்த கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மேற்குறித்த கிராமங்களுக்கு மீண்டும் பஸ் சேவையை ஆரம்பிக்க உரிய நடவடிக்கையை பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கிராமங்களின் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

யது பாஸ்கரன்



முட்டாள் தனம்

# அரசியலில் மாத்திரமல்ல

**லக்ஸ்மன்**

நாட்டுக்கு புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கும் போது அரசியல் ரீதியாக பலரும் பல கட்சிகளும், அதன் அரசியல்வாதிகளும் எதிர்த்தபோதும் ஒரு தொகுதியினர் ஆதரவையே தெரிவித்திருந்தனர். இருந்தாலும் அதன் பின்னர், நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நிலைமையும், நாட்டில் எதிர்வரும் நாட்கள், மாதங்கள் தொடர்பான அவருடைய அறிவிப்புகள் கவலையையே ஏற்படுத்தின. இந்தக் கவலைக்கு முற்றுப் புள்ளியை யார் கொண்டுவருவார் என்பதுதான் இப்போது எல்லோருடைய எதிர்பார்ப்பாகும்.

எதிர்காலத்தில் நாட்டுக்கு வரவிருக்கின்ற ஆபத்தான நிலைமையை ஜனாதிபதி புரிந்தாரா, புரிந்துகொள்ள முயற்சித்தாரா என்று சந்தேகிப்பதற்கு மாத்திரமே இப்போதைக்கு முடிகிறது. கோட்டா கோ ஹோம் - காலிமுகத்திடல் போராட்டம் ராஜபக்ச குடும்பத்தின் பெரும் பகுதியை வெளியேற்றியிருந்தாலும் ஜனாதிபதி இன்னமும் வெளியேற வழிசமைக்கவில்லை.

பிரதமரை மாற்றுவது, அமைச்சர்களை மாற்றுவது என்று படிப்படியான நடவடிக்கைகள் வந்திருந்தாலும் ஒன்றும் புதிதல்ல. இன்னும் முடிந்தபாடுமில்லை. பழையவர்களே மீண்டும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய அரசியல் பகட்டையும் மேதாவித்தனத்தையும் வெளிப்படுத்துகின்றனரே தவிர ஏதும் பிரயோசனம் ஏற்பட்டுவிடவில்லை. இதற்கு நல்லதொரு உதாரணம் அமைச்சர் நசீர் அகமட் தெரிவித்த பெற்றோலியப் பல்கலைக்கழகக் கதையும் பெற்றொலிய அமைச்சர் கதையுமாகும்.

ஆனால் யாரும் ஏற்க மறுத்த பிரதமர் பதவியை, ரணில் விக்கிரமசிங்க ஏற்று, நாட்டில் நடப்பதையும் நடக்கவுள்ளதையும் சொல்லிக்கொண்டு நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறார். இவர் இல்லையானால், யாரை பிரதமராக்குவார் என்றுகூட நாம் சிந்திக்காமலில்லை. ஆனால், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச யாரிடத்திலாவது பதவியைக் கொடுத்து விட்டு போவார் என்று யாரும் நம்பவுமில்லை.

நல்லாட்சி அரசாங்க காலத்தின் 2018 இறுதிப்பகுதியில் நாட்டினுடைய பிரதமராக ரணிலை நியமிக்கமாட்டேன் என்று அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். அப்போதும் நாட்டில் பிரச்சினை எழுந்திருந்தது. ஆனால் சட்ட ரீதியாகப் போராடி மீண்டும் அவர் பிரதமரானார். இப்போது பிரதமர் பதவியை அவரை அழைத்தே கோத்தபாய ராஜபக்ச கொடுத்தார். பிரச்சனைக்கு தீர்வு தருவேன் என்று இதுவரையில் புதிய பிரதமர் கூறவில்லை. நாட்டின் பிரச்சினைகளுக்கான தீர்வு சிறு பிள்ளைகளின் விளையாட்டல்ல என்பதே உண்மை. காலங்காலமாக எல்லோரும் காட்டிவந்திருந்த விடாப்பிடிக்கும் எதிர்ப்பு மனோநிலைக்கும் கிடைத்திருக்கும் பிரதிபலனே இது.

நமது நாடு எதிர்வரும் நாட்களில் 21ஆவது அரசியல் அமைப்புத்திருத்தத்தைக் காணவிருக்கிறது. அது வெறுமனே நிறைவேற்று அதிகாரத்தினை ஒழிப்பதாகவே அமையவிருக்கிறது. வேறு பிரயோசனம் ஏதுமிருக்கிறதா என்று உட்புகுந்துதான் தேடவேண்டும். ஒரு நாடு ஸ்திரமானதாக இருக்க வேண்டுமாக இருந்தால் அரசியலமைப்பு சிறப்பானதாக இருத்தல் வேண்டும். வெளிநாட்டுக் கொள்கை, அரசியல் கொள்கை, நிதிக்கொள்கை, பொருளாதாரக்கொள்கை, வர்த்தகக் கொள்கை, கல்விக் கொள்ளை என பல படிகளை அது தாண்டிவேண்டும். அரசுகள் மாற்றம் பெற்றாலும் கொள்கைகளில் மாற்றம் இருக்கக் கூடாது. ஆனால் அது நமது நாட்டிலிலை என்பதற்கு ஏற்பட்ட அத்தனை மாற்றமுமே சாட்சி பகருகின்றது. இந்த முன்னுக்குப் பின் முரணான தன்மை நம்முடைய நாட்டினை மீட்சிபெறச் செய்யாது என்பதையே பறைசாற்றுகின்றது.

ஆனாலும் இதில் மக்களுடைய பங்கு என்ன என்று பார்க்காது அது அரசியல் ரீதியாக மாத்திரம் தீர்வை ஏற்படுத்தி விடுவதில் பயனற்றதே. நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினையைத் தணிப்பதற்கு நாம் என்ன செய்தோம் என்ற கேள்வியை மக்கள் யாரும் கேட்பதாகத் தெரியவில்லை. நானும் என்னுடைய வேலையும் வாக்களித்ததுடன் முடிந்து போனது. அதற்கு அடுத்தபடியாகத் தேவையென்றால் போராட்டங்களை நடத்துவோம் என்று நின்றுவிடுகின்றது. இந்த நிலைமையில் மாற்றத்தினை ஏற்படுத்தப் போவது யார் என்பதே கேள்வி.

நாட்டில் புரையோடிப்போயிருக்கின்ற அரசியல் பிரச்சினை ஒருபக்கம் இருந்தாலும் நாட்டு மக்களாகிய நாம் ஒவ்வொரு நம்முடைய பிரச்சினைகளுக்கு அப்பால் ஏனைய ஒவ்வொருவருடைய பிரச்சினைகள் குறித்தும் கவலைப்படுபவர்களாக இல்லை. கொண்டுவா உண்டு காட்டுகிறேன் நிலைமையில் எரிபொருள் வரும்போதெல்லாம் அதற்காகச் செலவு செய்தே ஒவ்வொருவரும் இருந்துவிடுகிறோம். ஆரசாங்கமும் அதனுடைய வேலை எரிபொருளைப் பெற்றுத் தருவதே என்பது போன்று நகர்கிறது. யாரும் போக்குவரத்தில் எரிபொருளை மிச்சப்படுத்தியதாக இல்லை. அதே நேரத்தில் இப்போதும் ஒருவருக்காக ஓடும் வாகனங்களும், அரச அலுவலகங்களில் குளுகுளு ஏசிகளுக்குள் இருக்கும் அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எரிபொருள் இன்மையால்தான் மின் துண்டிக்கப்படுகிறது. நாம் எல்லோரும் நீண்ட வரிசைகளில் நிற்கிறோம். என்றால் அதற்குக்காரணம் டொலர் தட்டுப்பாடு. நாட்டின் கடன்களை நிவர்த்திக்க டொலறற்று இருக்கும் நாட்டிற்குள் எரிபொருள் கொண்டுவரப்படுவதற்கு டொலரே செலவு செய்யப்படுகிறது.

இந்தச் செலவை மீதப்படுத்துவதன் மூலமே அத்தியாவசியப் பொருள்களை நாட்டுக்குள் கொண்டுவர மடியும் என்பதனை நாம் மறந்தே இயங்குகிறோம். நும்முடைய நாட்டுக்குள் அத்தனை அத்தியாவசியப்பொருள்களும் தேவைக்திகமாக இல்லை என்பதனை நாம் யாரும் புரிந்து கொண்டதாக இல்லை. இல்லையானால் பிரதமர் சொல்வதைப் போன்று நாம் எல்லோரும் ட்டிணியை நோக்கிச் சென்றேயாகவேண்டும். பல உலக நாடுகள் இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டு வந்திருந்தாலும் இலங்கை மீள்வதற்கு என்னவழியென்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கலாம்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடியில் சுமார் 70 நாடுகள் சிரமங்களை எதிர்கொள்கின்றன. அந்த நாடுகளில் இலங்கை முன்னணியில் உள்ளது என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து நம்மைச் சிந்திக்க வைக்கவேண்டும். ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தின் அடிப்படையில் கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம். இந்த நிலையான கொள்கைகள் மட்டுமே நாடு எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சிறந்த வழிமுறை. சர்வதேச வட்டி விகிதங்கள் உயரும் அபாயம் அதிகம் நிலவுவதாக தெரிவித்த பிரதமர், சர்வதேச உணவுப் பொருட்களின் விலைகள் உயரும் அபாயமும் இந்த தருணத்தில் காணப்படுவதாவும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். இந்த எதிர்வுகூறல்கள் நம்மை சுதாரித்துக் கொள்வதற்கான கருத்துக்களாகும். ஆதனை யார் செய்கிறோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்படும் வரை இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வைக் காண்பது கடினம் என்பதுதான் பொருளாதாரத் துறையினரின் கருத்து, இந்நிலை, மோசடிகளால் ஏற்பட்டதா, ஊழல்களால் ஏற்பட்டதா, உழைப்பின்மையால் உருவானதா என்றெல்லாம் நாம் சிந்திக்கலாம். ஆனால் இப்போதைய நிலைமையைச் சீர் செய்வது எப்படியென்று சிந்திப்பதே இல்லை. அந்த வகையில்தான் இந்த நாட்டை ஆண்ட எந்த அரசியற் தலைவர்களிடமும் ஒரு நல்ல நோக்கம் இருக்கவில்லை என்பதும் இதுவரை மக்கள் யாரும் நாட்டைப்பற்றிச் சிந்திக்கவில்லை என்பதும் ஒற்றுமைப்படுகிறது.

இப்போதும், அரசியல்வாதிகள் எல்லோரும் மற்றைய அரசியல்வாதிகளை விமர்சிப்பதிலேயே நாட்களைக் கடத்துகின்றனர். மக்களைப் பற்றிய அக்கறை இல்லாமையே இதற்குக் காரணம். அதே நேரத்தில் மக்கள் வாக்களித்துத் தெரிவு செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்ன பொறுப்பு என்பது பற்றி அவர்களுக்கு விளக்கமளிப்பதிலிருந்தும் தவறியிருக்கிறோம். அது தொடர்பான அக்கறையை நாம் காண்பிக்கவேண்டும் என்பதனையும் உணரவேண்டியது கட்டாயமாகும்.

எப்போதும் தமிழர்கள் சொல்வது போன்று நாட்டில், மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல யுத்திகளைக் கையாண்டனரே தவிர நாட்டு நலனை பொதுவில் சிந்திக்கவில்லை. இப்போதும் சிந்திக்கிறார்கள் இல்லை என்று குற்றம்சாட்டலாம். ஆனால் அதனால் ஏதும் பயன் விளைந்ததா என்றால் பதில் இல்லையென்றே கிடைக்கிறது. இன்று நட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரக் இக்கட்டிலிருந்து மக்கள் மீண்டெழுவது மிகவும் கடினம் என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், கண்கெட்ட பின்னரும் கூட சூரிய நமஸ்காரம் செய்தேயாகவேண்டும்.

நாட்டில் யுத்தமில்லாத சமாதானம் ஏற்பட்டுவிட்டால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டிவிடும் என்றே எல்லோரும் நம்பியிருந்தனர். இருந்தபோதிலும் இப்போது ஏற்பட்டிருக்கின்ற நிலைமைக்கு அரசியலை மாத்திரம் பழி சொல்ல முடியாத என்பதே உண்மை. சோம்பேறிகளாகிவிட்ட மக்கள் கூட்டத்துக்கு உழைப்பு முக்கியப்படுகிறது. அதே போன்று அரசயிலை மக்களுக்கானதாக மாற்றும் அரசியல்வாதிகள் உருவாகவேண்டும். இவைகளே முட்டாள் தன அரசியலில் இருந்து மீளவும் வழி. இல்லையேல் வெளிநாடுகளையும் வெளிநாடுகளிலுள்ள நிதி அமைப்புகளையும் நம்பியே காலத்தினை ஓட்டவேண்டியதுதான்.

வீட்டு வாசலை மரண ஒலி வந்து தட்டும் வரை

# காத்திருக்க வேண்டாம்



வ.சக்திவேல்

யாவரும் ஆரோக்கியமாக வாழவேண்டுமெனில் மனிதனின் நடத்தைகளும், செயற்பாடுகளும், இன்றியமையாததாகிவிட வேண்டும். இவற்றினை விடுத்து, தாமும் தமது தன்னிச்சையான செயற்பாடுகளுமாக ஏனோ, தானோவென்று தத்தமது நாளாந்தக் கடமைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் ஆரோக்கியமான வாழ்வு என்பது கடினமானதாகவே அமைந்து விடுகின்றன.

எனினும் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன. மாவட்டத்தில் ஆங்காங்கே காணப்படும் சிறு, சிறு நீர்த் தேக்கங்கள், குளங்கள், குட்டைகள், போன்றவற்றினூடாக, நுளம்புப் பெருக்கம் அதிகதித்துள்ளடன். நாளாந்தம், மனித நடவடிக்கைகள் மூலம், இடம்பெறும் வெற்றுப் போத்தல்கள், கலன்கள், சிரட்டைகள், பொலித்தீன் பைகள் போன்ற கழிவுகளையும், பொறுப்பற்றவித்தில், பொது இடங்களிலும், வெற்று வளவுகளினுள்ளும், வீசுவதனால் அவைகளில் நீர் தேங்கி நின்று கிராமங்களுக்குள்ளும், டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பொருக்கம் அதிகரிப்பதற்கு எதுவாக அமைந்து அது வியாபித்தும் வருகின்றன.

மாவட்டத்தில் இந்த நிலமை இவ்வாறு செல்கின்ற போதும், “எமது வீட்டு வாசலை மரண ஒலி வந்து தட்டும்வரை காத்திருக்க வேண்டாமெனமும் அனைவருமாக ஒன்றினைந்து இந்த டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த முன்வரவேண்டும்” என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு உருக்கமான வேண்டுகோள் ஒன்றினை முன்வைக்கின்றார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் டெங்கு நோய் தாக்கம் மிக வேகமாக அதிகரித்த வண்ணம் உள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

இதனடிப்படையில் டெங்கு தாக்கம் அதிகமுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில், கடந்த 5 மாதங்களுக்குள் 422 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன், 2 இளவயது மரணங்களும் சம்பவித்துள்ளது, மட்டக்களப்பு நகர் பகுதியில் மாத்திரம் 240 பேர் டெங்கு நோயாளர்களாக அடயாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்திற் கொண்டு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன், மண்முனை வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி வைத்தியர் இ.உதயகுமார், பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு உத்தியோகத்தர்கள உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டு பாடசாலைகள் உள்ளிட்ட பல இடங்களுக்கும் அண்மையில் கள பரிசோதனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு நகர் பகுதியில் உள்ள சாதாரண தர பரீட்சை நடைபெறுகின்ற பாடசாலைகள் மற்றும் பரீட்சை நிலையங்கள், பொது இடங்கள், மக்கள் குடியிருப்புக்கள் என்பவற்றைப், பார்வையிட்டடுள்ளதுடன், டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங்களாக இதன்போது இனங்கண்டு சிவப்பு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இக்குழுவின் அடுத்த கள விஜயத்தின் போது டெங்கு பரவ வாய்ப்புள்ள இடங்கள் என இனங்கானப்பட்ட பகுதிகள் துப்பரவு செய்யப்படாவிட்டால் எந்தவொரு உயர்வு, தாழ்வும் பாராது உச்சக்கட்ட சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளதாகவும் அக்குழு தெரிவித்து எச்சரிக்கையும் விடுத்துள்ளது.















இதனிடையே, நாட்டில் டெங்கு தாக்கம் அதிகமுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதான, விழிப்புணர்வு வேலைத்திட்டங்களும் தற்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது ஆலோசனைக்கு அமைவாக சுகாதாரத் துறையினரின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன், பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள் நீர் தேங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம் கொடுக்காத வகையில் சூழலை துப்பரவாக வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் குறைவடைந்துள்ள நிலையிலும், டெங்கு பரவல்கள் மேலும் அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி, மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு சிரமாதான வேலைத்திட்டம் கிரமமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இம்மாவட்டத்திலிருந்து கொரோனா மற்றும் டெங்கு தொற்றுக்களைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுவதற்கும், விசேட வழிப்புனர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப் படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவருகின்றது.

மாவட்டச் செயலாளரின் பணிப்புரைக்கமைய, பொது இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வாராந்த சிரமதான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றி நடப்பதுடன், டெங்கு நுளம்பு பரவலில் இருந்து அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவினரால் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு டெங்குத் தாக்கத்திற்குட்படுவோர் தொடர்ந்து வாரா வாரம் அதிகரித்துச் சென்றால் மாவட்டத்தின் நிலமை மேலும் மோசமடைந்த செல்லும். தனி மனிதன், தான் மாத்திரம் சுகதேகியாக இருந்தால் மாத்திரம் போதாது அயலிலுள்ளவர்களும், தேக ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட வேண்டும். என்ற எண்ணமும், சிந்தனைகளும், அனைவரினம் மனதில் எழவேண்டும். அப்போதுதான் சிறந்ததொரு ஆரோக்கியமான சமூகமும், சூழலும், கட்டியெழுப்பப்படும் எனலாம்.

### டெங்கு என்றால் என்ன?

எடிஸ் எயுப்பிஸ், எடிஸ் அல்போபிற்றஸ், (*Aedes Aegypti, Aedes Albopictus* ) அகிய இரண்டு வகை நுளம்புகளால் பரவக்கூடிய ஒரு வைரஸ் கிருமியால் டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது. இந்த வகை நுளம்புகள், ஏனைய நுளம்பு வகைகளைப் போலல்லாமல், பகல் வேளைகளில்தான் கடிக்கின்றன.

இவ்வாறு டெங்கு நோய் ஏற்பட்டுள்ள ஒருவருக்கு தலைவலி, காய்ச்சல், தோலில் தடிப்புகள், உடம்பு வலிகள் காணப்படும். நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்து கொள்ள வேண்டும். ஏதும் அறிகுறிகள் தெரிந்தால், மருத்துவரிடம் உடன் செல்ல வேண்டும், அதிகளவு நேரம் ஓய்வு எடுக்க வேண்டும்.

திருவள்ளுவர் திருக்குறளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சுற்றுசூழலின் தூய்மை தொடர்பில் மிகவும் இலகு வசன நடையில் எடுத்துரைத்துள்ளார். அந்த வகையில்.

“புறந்தூய்மை நீரான் அமையும், அகந் தூய்மை
வாய்மையால் காணப் படும்”

“புறந்தூய்மை” என்பது நாம் அன்றாடம் குளித்தல், துணிகளைத் துவைத்தல், பாத்திரங்களைக் கழுவுதல், வீட்டைக் ஒழுங்குசெய்தல் உள்ளிட்ட பலவற்றை உள்ளடக்கலாம். மக்கள் அதிகமாக வாழும் இடங்களில், முழுசுகாதாரம் என்பது கேள்விக்குறியாக உள்ளது. பொது இடங்களில் கழிவுகளை வீசுவது, மேலதிக உணவுப் பண்டங்களை வீதிஒரங்களிலும், குடியிருப்புக்களிலும், கழிவு நிர் தேங்கி நிற்கும் இடங்களிலும் வீசுவது, தெருக்களில் குப்பைகளைக் கொட்டுவது போன்றவற்றால் புறந்தூய்மை சீர்கேடு அடைகிறது, எனவே, மக்களும், அரச அதிகாரிகளும் ‘புறந்தூய்மையை’ ஏற்படுத்துவது மிகவும் அவசியம். அதன் மூலம் சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டும் என்பதை சொல்லாமல் சொல்லி வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

எனவே இவ்வாறான நிலைமை ஏற்படாதிருக்க ஒவ்வொரு தனிமனிதனும், தான் சார்ந்த சூழலையும், சுத்தமாக வைத்திருந்து பிறரையும் அதுபோல் வழிநடத்தி, டெங்கு கட்டுப்பாட்டு அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி மனித உயிர்களை வீணாக பலிக்கடாவாக்குவதற்கு இட்டுச் செல்லாமல் பாதுகாக்கலாம். துறைசார்ந்த அரச நிருவாகங்களும், மக்கள் மத்தியில் முறையான கண்காணிப்புடன் கூடிய விழிப்புணர்வு செயற்பாடுகளையும் முடுக்கி விடவேண்டும் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

# பாவனையை நிறுத்தி வலுச்சேர்ப்போம்

**மே. 31ம் உலக புகைத்தல் எதிர்ப்புத் தினமாகும**



உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31ம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் பிரகடனப்படுத்தப்பட்டு இருப்பதுடன் குறிப்பிட்ட தினத்தில் கருப்பொருளொன்று முன்வைக்கப்பட்டு, விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் 2022ஆம் ஆண்டின் உலக புகையிலை எதிர்ப்பு தினத்தின் கருப்பொருளாக ‘சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்’ என்ற கருப் பொருள் முன்வைக்கப்பட்டுள்ளது. புகைப் பொருள் பாவனையானது சூழலை மாசடையச்செய்யும் பிரதான காரணிகளில் ஒன்றாகும்.

குறிப்பாக, சிகரெட் தயாரிப்பதற்கு உலகளாவிய ரீதியில் சுமார் 600 பில்லியன் மரங்கள் வருடாந்தம் வெட்டப்படுகின்றன. சுமார் 84 பில்லியன் டொன் காபன் டயொக்சைட் துணிக்கைகள் சூழலில் சேர்வதனால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கப்படுகின்றது. மேலும் வருடாந்தம் சிகரெட் தயாரிக்க சுமார் 22,000 பில்லியன் லீற்றர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. புகையிலை உற்பத்தியினால் 2 மில்லியன் டொன் கழிவுகள் தேங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சிகரெட் உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பிரதான மூலப் பொருளான புகையிலை பயிர் செய்கையானது சூழலிற்கு பாரியளவில் தீங்கு விளைவிக்;கின்றது, அதாவது புகையிலை உற்பத்திக்கு அதிகமான இரசாயனங்கள் பாவிக்கப்படுகின்றது. புகையிலை உற்பத்தி செய்யப்படும் மண் வளமற்றுப் போவதுடன் அரிய வகை உயிரினங்கள் அம்மண்ணில் வாழ்வதும் குறைவடையும், இதனால் இலங்கையில் அதிகமான நிலங்கள் தரிசு நிலங்களாக்கப்பட்டு இருக்கின்றன. மண்ணை பாதுகாக்கின்ற, புகையிலை உற்பபத்தியை விட இலாபமீட்டக்கூடிய உற்பத்தியை மேற்கொள்வதற்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டியது இன்றியமையாததாகும். சர்வதேச ரீதியாக வருடமொன்றிற்கு 4.3 மில்லியன் ஹெக்டேயர் நிலம் புகையிலை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதுடன் 2%-4% இற்கும் இடையிலான காடழிப்புக்களும் இடம்பெறுகின்றன.

உலகளாவிய ரீதியில் புகைத்தல் பாவனையால் சுமார் 08 மில்லியன் பேர் இறக்கின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிடுகின்றது. இவற்றுள் ஒன்பது இலட்சம் பேர் இரண்டாம் நிலை புகைத்தலினால் மரணிக்கின்றனர்.

இன்றைய உலகில் மனித சமுதாயத்தின் இது போன்ற கொடூர மரணத்திற்கு எந்தவிதமான உள்ளாட்டு யுத்தமோ அல்லது வேறு எந்த விதமான காரணியும் தாக்கம் செலுத்தவில்லை என்பது தெளிவாக புலப்படும் உண்மையாகும்.

எமது நாட்டில் புகைத்தல் பாவனையின் காரணமாக தினமும் சராசரியாக 55 பேர் அகால மரணத்தைத் தழுவுகின்றனர் அதே வேளை வருடத்திற்கு சராசரியாக 20,000 இலங்கையர்கள் மரணிக்கின்றனர். புகையிலை நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் தினமும் இறப்பதால் அவ்வெற்றிடத்தை பூரணப்படுத்துவதற்காக அந்நிறுவனம் இளைஞர்களையும், சிறுவர்களையும் பிரதானமான இலக்காக கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எமது நாடு தற்போது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதோடு, அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்து கொள்வதற்கு தேவையான டொலர்கள் பற்றாக்குறை காணப்படும் இத்தருணத்திலும்; வீணாக சிகரெட்டிற்கு செலவழிக்கபடுவதால் எஞ்சி இருக்கின்ற டொலர்களையும் பிரித்தானியா, அமெரிக்கா சுரண்டியெடுக்கின்றன. மேலும் சிகரெட் நிறுவனத்திடம் வரி அறவிடப்பட்டாலும் அத்தொகையையும் விட பாரிய தொகையொன்று புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்களிற்கு செலவிடப்படுகிறது.

அனைத்து அத்தியாவசியமான பொருட்களின் விலைகளும் சடுதியாக உயர்வடைந்த போதிலும் சிகரெட்டிற்கான விலை மிகவும் குறைவான சதவீதத்திலேயே அதிகரிக்கப்பட்டிருக்கின்றது அதாவது தற்போதைய பணவீக்கத்திற்கு ஏற்ப சிகரெட் விலை அதிகரிகரிக்கப்படவில்லையென்பதுடன், அதிகரிக்கப்பட்ட விலையின் அளவானது சிகரெட் உற்பத்தி நிறுவனத்திற்கு இலாபம் பயக்கும் விதமாகவே அமைந்துள்ளது. இதன் பின்புலத்தில் சிகரெட் உற்பத்தி நிறுவனத்தின் தலையீடு இருப்பதாகவே துறை சார்ந்த நிபுனர்களினால் சந்தேகிக்கப்படுகிறது. இது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

பல்தேசிய நிறுவனங்களானது சர்வதேச ரீதியில் அரசாங்கத்தில் தீர்மானம் எடுக்கக்கூடிய நபர்களுக்கு பலவகையான இலஞ்சங்களை வழங்கி தங்களுக்கு தேவையானவற்றை செய்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையிலும் இது போன்றோரை அடையாளம் கண்டு வெளிக்கொணர வேண்டும்.

சிகரெட் பாவனையினால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்கும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார, சுகாதார, சமூக பிரச்சினைகளை குறைப்பதற்கும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகினறன.



ஆ. கோடீஸ்வரர்
இணைப்பதிகாரி, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்



புபுது சுமனசேகர
நிறைவேற்றுப் பணிப்பாளர், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்

**சிகரெட் புகைப்பதனால் ஏற்படும் சூழல் மாசடைவுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்.**

**பொருளாதார பிரச்சினை அதிகரித்திருக்கும் இக்காலப் பகுதியில் வீணாக சிகரெட்டிற்கு செலவாகும் பணத்தை சேமித்து பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க பாவனையாளர்களை ஊக்கப்படுத்தல்**

**எமது நாட்டிலிருந்து, பிரித்தானியா, அமெரிக்கா சிகரெட் உற்பத்தி நிறுவனத்தினால் சுரண்டியெடுக்கப்படும் டொலர்களை சிகரெட் புகைப்பதை நிறுத்துவதன் மூலம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.**



றஹீம்
சிரேஷ்ட நிகழ்ச்சி அதிகாரி, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்

**புகைத்தல் பாவனையினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளின் கனதியை கருத்திற்கொண்டு புகைத்தல் எதிர்ப்பு தினத்தை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி புகைத்தல் பாவனையை நிறுத்துவதற்கு ஊக்கமளித்தல்**



நிதர்ஷனா செல்லதுரை
நிகழ்ச்சி அதிகாரி, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்

**அரசாங்கத்திற்கு இலாபமீட்டும் வகையிலான தற்போதைய பணவீக்கத்திற்கு அமைய, சிகரெட் மீதான வரி அறவீட்டு முறைமை ஒன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து, அரசாங்கத்திற்கு அதிகளவு வருவாயை ஈட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.**

**சிகரெட் உற்பத்தி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வெளிக்கொணருதல். அவற்றிலிருந்து இளைஞர்களையும் சிறுவர்களைளும் பாதுகாப்பதற்கு முயற்சித்தல்.**

எனவே மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளை மையமாக வைத்து தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கு சிகரெட் பாவனையை நிறுத்தி வலுச்சேர்ப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்



யுத்தத்தில் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய கிராமங்களில்

# பசி பட்டினி



சுப்பிரமணியம் பாஸ்கரன்

வறுமை தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது. இதனால் வாழ்வதற்கு வழி தெரியாத பல குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றன.

உலக நாடுகள் உணவுப் பஞ்சத்ததை எதிர் நோக்கவுள்ளதாக ஐ.நா எச்சரிக்கை விடுத்துள்ளது. அதாவது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் யுத்தம் காரணமாக, உலகில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக, உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து வரும் நிலையில், ரஷ்யா, உக்ரைனில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தடைப்பட்டு உள்ளமையினால், உலக நாடுகளின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விரைவில் உலக நாடுகள் உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் என ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். உக்ரைன் போரால், உலகளவில் விலைவாசி கடுமையாக உயர்ந்து வருவதாகவும் இது ஏழை நாடுகளில் உணவு பாதுகாப்பின்மையை மோசமாக்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அதாவது, உக்ரைனில் சமையல் எண்ணெய், கோதுமை, சோளம் உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதி தடைப்பட்டுள்ளதுடன், உணவுப்பொருட்களின் விலையும் 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது நாளடைவில் மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று, இலங்கையில் வறுமை தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது. இதனால் வாழ்வதற்கு வழி தெரியாத பல குடும்பங்கள், பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி உள்ளன. அதாவது, அத்தியாவசிய பொருட்களின் கட்டுக்கடங்காத விலையேற்றம், பால்மா, மருந்துப் பொருட்களின் தொடர் தட்டுப்பாடு, உற்பத்திகளின் வீழ்ச்சி, தொழில் வாய்ப்பின்மை என்பன பிரதான காரணிகளாகக் காணப்படுகின்றன.

> **வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொடர்ந்த உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு, மீள்குடியேறிய குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன**

இதிலும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொடர்ந்த உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு, மீள்குடியேறிய குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ‘மரத்தில் இருந்து விழுந்த வனை மாடேறி மிதித்த கதை’யாக இவர்களின் கதை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குஉட்பட்ட மீள்குடியேற்றக் கிராமமான கல்மடு நாவல் நகர், றங்கன் குடியிருப்பு என்ற கிராமத்தில் தற்போது 70 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், நாளந்தம் ஒரு நேர உணவை மாத்திரமே உட்கொள்ளும் நிலையில் தற்போது வாழ்ந்துவருவதாக அப்பகுதியைச் சேர்ந்த பலர் உறுதிப்படுத்துகின்றனர்.

கடந்த வாரம், கல்மடு நாவல் நகர், றங்கன் குடியிருப்பு கிராமத்துக்குச் சென்ற போது, அங்குள்ள பலர் இதைத்தெரிவித்திருந்தனர். குறிப்பாக, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள், தொழில் வாய்ப்பற்ற குடும்பங்கள் இவ்வாறான கஷ்டங்களை எதிர் நோக்கி வருவதாக அறிய முடிந்துள்ளது.

“நாங்கள் யுத்தத்தில் அனுபவித்த துன்பங்களை விட, அதிக துன்பங்களை இப்போது அனுபவிக்கின்றோம். அரிசி ஒருகிலோ 270 ரூபாய்; பால் மா, பருப்பு எதையும் கண்ணால் காண முடியவில்லை. சீனி 270 ரூபாய்; மண்ணெண்ணெய் இல்லை; டீசல் இல்லை; பெட்ரோல் இல்லை; அதனால் எங்களுக்கும் தொழில் வாய்ப்பு இல்லை. நாங்கள் யுத்தத்தில் இடம்பெயர்ந்து செல்லும் போது, நன்றாகச் சாப்பிட்டோம்; பஞ்சம், பசி, பட்டினி எதுவுமில்லை; நாங்கள் மிக நன்றாக உழைத்துச் சாப்பிட்டோம். எங்களுக்கு எந்தக் குறைகளும் இருக்கவில்லை. ஆனால், உயிர்ப் பயம் மாத்திரமே இருந்தது. இப்போது, எங்களுக்கு நிம்மதி இல்லாத வாழ்க்கை தான் தொடர்கின்றது. தமிழர்களாகிய நாங்களும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றோம். ஆனால், நாங்கள் அவற்றை வெளிக்காட்டவில்லை. பசி, பட்டினி என்று நாங்கள் கத்தவில்லை; எத்தனையோ வீடுகளில் பசி, பட்டினியுடன் சிறுவர்களும் குழந்தைகளும் கர்ப்பிணித் தாய்மார்களும் வாழ்கிறார்கள். அவர்கள், பசி, பட்டினி என்று வெளியில் கத்தவில்லை; ஆனால், இப்போது கொழும்பில் விலைவாசிக்கு எதிராக போராடுகிறார்கள்” என்று தெரிவித்தனர்.

> **இந்த இரண்டு சிறுவர்களும் காலை முதல் இப்போது நாலு மணி வரைக்கும் எந்த விதமான சாப்பாடும் இல்லாது தான் இருக்கின்றார்கள். வீட்டில் சமைப்பதற்கு அரிசி இல்லை**

அந்த இடத்தில் இருந்த இன்னுமொரு குடும்பப்பெண் தெரிவிக்கையில், “இன்று எத்தனையோ குடும்பங்கள் பசி பட்டினியோடு இருக்கின்றன. ஆனால் அவர்கள் அதனை வெளிக் காட்டுவதில்லை. இந்த இரண்டு சிறுவர்களும் காலை முதல் இப்போது நாலு மணி வரைக்கும் எந்த விதமான சாப்பாடும் இல்லாது தான் இருக்கின்றார்கள். வீட்டில் சமைப்பதற்கு அரிசி இல்லை; ஏனைய பொருட்கள் இல்லை. கணவன் வேலை தேடிச் சென்று இருக்கின்றான். வேலை கிடைத்தால் வேலை செய்து கிடைக்கும் பணத்தில், முக்காவாசி குடித்துவிட்டு வருவார் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு பலகுடும்பங்களின் நிலை, இப்போது பரிதாபத்துக்கு உரியதாகவே உள்ளது.





கடல் கடக்கும் முயற்சியில் கதியற்ற நிலைமை

# சொகுசும் வேண்டாம்; மவுசும் வேண்டாம்

## நிம்மதியைத் தேடுவோருக்கு கைகொடுக்கும் காடும் களனிகளும்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com



தற்போது நாடு எதிர்கொண்டுள்ள வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவு, மக்களை தமது விருப்பத்துக்குரிய இடங்களிலிருந்தும் விரட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு காலகட்டத்தில், சொகுசான வாழ்க்கை வசதிகளைத்தேடி நகர்ப்புற வாழ்க்கையில் மோகம் கொண்டிருந்த மக்கள், இப்பொழுது உயிர்வாழ்வதற்காக மட்டும் எங்கோ ஓரிடத்தில் ஒதுங்கிக் கொண்டால் போதும் என்ற நிலைக்கு வந்துள்ளார்கள்.

நாளாந்தம் முகம்கொடுக்கும் எரிபொருள், மின்சாரம், சமையல் எரிவாயு, பால்மா, உணவுத் தானியங்கள் என்பனவறுக்கான தட்டுப்பாடு, விலையேற்றம் போன்றவற்றைச் சமாளிக்க, இனி வேறு வழியே இல்லை என்ற நிலையில், தற்போது தமக்கு வாய்ப்பான நகர்ப்புற வாழக்கையை விட்டு, கிராமப் புறங்களுக்கும் காடு களனிகளுக்கும் பலர் இடம்பெயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

அதேவேளை பொருளீட்டுவதற்காக அல்லது எதிர்கொள்ளப்போகும் பஞ்சத்திலிருந்து தமது உறவுகளைப் பாதுகாப்பதற்காக, பலர் கடல்தாண்டி, சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சிப்பதும் பிடிபடுவதும் அதிகரித்து வருகின்றது.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம், மனிதனுக்கு மிகவும் அவசியம். அதேவேளை, உண்ண உணவில்லாத நிலையில், மற்றைய உடையும் உறையுளும் ஆடம்பரமாக இருந்தபோதிலும் அதனால் பயனில்லை. உயிரைக் காத்துக் கொண்டால்தான் மற்றைய சொகுசு வாழ்க்கைக்கு மவுசு இருககும். இப்பொழுது சொகுசும் வேண்டாம்; மவுசும் வேண்டாம் உயிர் பிழைத்துக் கொண்டால்போதும் என்ற நிலை உருவாகியிருக்கின்றது.

கடந்த வாரம் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த 17 ஆண்கள் 4 பெண்கள் உள்ளடங்கலாக 21 பேர் மட்டக்களப்பு, கிரான்குளம் தர்மபுரம் பகுதியில் உள்ள கடற்கரையில் ஒன்று சேர்ந்து கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் புறப்பட்ட சமயம் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

அதேபோல இவ்வாரம் ஆரம்பத்தில் திருகோணமலை, சாம்பல்தீவு - சல்லி பிரதேசத்திலிருந்து நாட்டை விட்டு கடல் வழியாகச் செல்லப் புறப்பட்ட 57 ஆண்கள் 7 பெண்கள், 3 குழந்தைகள் உள்ளடங்கலாக 67 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை,



மட்டக்களப்பு, புத்தளம், அம்பாறை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள்.

எதிர்கால நிலைமை நம்பிக்கையூட்டுவதாக இருக்காது என்று கருதுவதாலேயே, எங்களை விட்டால் போதும் எங்கோ தப்பிச் சென்று உயிர் பிழைத்துக் கொள்கின்றோம் என்ற மன நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கடல் மார்க்கத்தில் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வது சவால் நிறைந்தது; பேராபத்து உள்ளது என்று தெரிந்தும் கூட, பலர் அதில் மும்முரமாக சாவா வாழ்வா எனும் ஜீவமரணப் போராட்டத்தை மேற்கொண்டு இடம்பெயர முயற்சிக்கின்றனர்.

இது ஒரு புறமிருக்க, இந்தப் பகீரதப் பிரயத்தனங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாது, நகரப் புறங்களிலிருந்து கிராமப் புறங்களுக்கும் காடு களனிகளுக்கும் இடம்பெயர்வோரின் தொகையும் கணிசமாக அதிகரித்திருக்கின்றது.

மூதூர் நகரப் பிரதேசத்தில் வதிவிடத்தைக் கொண்ட பாடசாலை ஒன்றின் அதிபராக கடமையாற்றும் ஏ.எஸ். அபூபக்கர், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்காக அயலிலுள்ள அறபா நகர் கிராமத்துக்கு இடம்பெயர்ந்திருக்கிறார். அங்கு சிறந்த வீட்டுத் தோட்டத்தை அவர் அமைத்துள்ளார். சமையல் எரிவாயுத் தட்டுப்பாட்டையும் அதன் விலையேற்றத்தையும் சமாளிக்க, போதியளவு விறகு இலவசமாக காடுகளில் இருந்து கிடைப்பதாக அவரது மனைவி நஜீஹா கூறுகிறார்.

நஜீஹா சிறந்த தையல் கலை வடிவமைப்பாளர். இதுவரை சுமார் 800 பெண்களுக்கு தையல் கலையைப் பயிற்றுவித்திருப்பதாகக் கூறும் அவர், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக தன்னிடம் உடைகள் தைக்க வருவோரின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்திருப்பால், தையல் தொழில் மூலம் கிடைக்கும் வருமானமும் பெரும்பாலும் இல்லை என்று தெரிவிக்கறார்.

தனது வாழ்வாதாரத்துக்கான வருமானம் இழக்கப்பட்டாலும், மனம் சோர்ந்து விடாமல், தான் மாற்று வழியாக இப்பொழுது மரக்கறி, பழங்கள் என்பனவற்றுடன் மூலிகைச் செடிகளை, குறிப்பாக கற்றாளை பயிரிட்டு அதிலிருந்து பல தயாரிப்புகளைச் செய்து வருமானம் ஈட்டுவதாகக் குறிப்பிடுகிறார். இதற்கு கிராமப்புற சூழல் நல்ல வாய்ப்பளித்து இருக்கின்றது.

அதேவேளை, பால்மா தட்டுப்பாட்டையும் சமாளிக்க தங்கள் கிராமத்தில் இலகுவாக பசும்பாலைப் பெற்றுக் கொள்ள முடிவதாகவும் அவர் கூறுகிறார். மரக்கறிகளையும் தாராளமாக உற்பத்தி செய்ய முடிகிறது. மின்சாரத் தட்டுப்பாட்டையும் நிலாவொளியில் ஈடு செய்கிறோம். மொத்தத்தில் பாரம்பரிய வாழ்க்கை முறை நெருக்கடியைக் குறைத்து, நிம்மதியைத் தந்திருக்கிறது என்கிறார்.

ஒரு நாடு பொருளாதாரத்தில் தன்னிறைவு காணவேண்டுமாயின் அங்குள்ள மக்களுக்கு மன நிறைவும் போதிய உணவும் கிடைக்க வேண்டும். அப்போதுதான் அந்த தேசம் உத்வேகத்துடன் இயங்க முடியும். பஞ்சம், பசி, பட்டினி என்பன இல்லாத தேசம் ஒன்று உருவாக வேண்டும் என்றால், அந்நாடு விவசாயத்தில் உச்சநிலை பெற வேண்டும். இல்லாவிடில் அந்த நாடு வளர்ச்சி பெறுவதென்பது இயலாத காரியமாகும்.

மனிதனின் உயிர்மூச்சாக விவசாயம் உள்ளது. அதனால்தான், நம் முன்னோர் உடல் ஆரோக்கியத்துடன் வளமான வாழ்க்கை வாழ்ந்தனர். அன்று இஷ்டப்பட்டு விவசாயம் செய்தனர். ஆனால் இன்று நாம் சுய சார்பு விவசாயத்தை புறக்கணித்ததால் கஷ்டப்படும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு, மன அழுத்தத்துடன் வாழ்கின்றோம். விவசாயம் தொழில் அல்ல; அது எமது உயிர்நாடி. உலகத்தின் ஒவ்வோர் உயிர்களுக்கும் பசி என்ற உணர்வு இருக்கும் வரை, விவசாயம் செய்தேயாக வேண்டும். உழவு இல்லையேல் உணவு இல்லை.

சனத்தொகை பெருகி வருவதால் உணவு உற்பத்தி அதற்கேற்ப இல்லாவிடின் உலகமே பாரிய பிரச்சினைகளில் சிக்கிவிடும். ஒவ்வொரு நாடும் தனது உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக வேறு நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. நாட்டிலே மக்கள் சிறப்பாக வாழ வேண்டுமானால் அங்கே உழவுத்தொழில் சீரும் சிறப்புமாக நடந்தாக வேண்டும். எனவே உழவுத்தொழிலை போற்றிப்பாதுகாப்பது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

# மண்ணை மேயும் மனம், பறப்பதற்கு ஆயிரம் இறக்கைகள் ஆகிய இரு நூல்களின் வெளியீடு



வ. சக்திவேல்




மட்டக்களப்பைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரும், ஆசிரியருமான வைரமுத்து துசாந்தன் எழுதிய 'மண்ணை மேயும் மனம்' எனும் கவிதைத் தொகுதி மற்றும் 'பறப்பதற்கு ஆயிரம் இறக்கைகள்' எனும் பத்தி எழுத்து கட்டுரை தொகுதி, ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினால் கடந்த 21.05.2022 அன்று முனைக்காடு உக்டா சமூகவள நிலையத்தில் நடைபெற்றது.

பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் கவிஞர் த.மேகராசா (மேரா) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கெனடி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிடிருந்தார்.

இதன்போது வரவேற்புரையை கவிஞர் சோலையூர் ஆ.தனுஸ்கரனும் 'பறப்பதற்கு ஆயிரம் இறக்கைகள்' எனும் பத்தி எழுத்து கட்டுரை தொகுதியின் மதிப்பீட்டு உரையை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழித்துறை மேனாள் தலைவர் பேராசிரியரும் 'மண்ணை மேயும் மனம்' எனும் கவிதைத் தொகுதி நூலின் மதிப்பீட்டுரையை கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் நடன நாடகத்துறை முதுநிலை விரிவுரையாளர் க.மோகனதாசம் ஏற்புரையை நூலாசிரியர் வ.துசாந்தனும் நன்றி உரையை பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் செயலாளர் அ.தேகதாஸூம் நிகழ்த்தினர்.

நூல்களின் முதற் பிரதிளை குணா மல்டிசொப் உரிமையாளர் சா.குணகேசரம் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் எழுத்தாளர் புரவல் மூ.அருளம்பலம், மற்றும் கவிஞர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆலயங்களின் நிருவாகத்தினர், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சுயாதீன ஊடகவியலாளரும், ஆசிரியரும், எழுத்தாளருமான வைரமுத்து துசாந்தனின் இலக்கிய நோக்கைக் கருத்திற் கொண்டு பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தால் வாழ்த்துப்பா வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



































லண்டனில் நூல் வெளியீட்டு விழா

# மலையக அரசியல்; தலைமைகளும் தளபதிகளும்

மூத்த தொழிற்சங்கவாதியும் முன்னால் பாராளுமன்ற உறுப்பினரருமான சி.வி வேலுப்பிள்ளை 1958 களில் மலைநாட்டுதமிழ் மக்கள் தலைவர்கள் என்ற தலைப்பில் நடேசஐயர், அப்துல் அஸீஸ், எஸ்.தொண்டமான், ஜார்ஜ் ஆர். மோத்தா, பெரிசுந்தரம், கே.இராஜலிங்கம், ஐ.எக்ஸ். பெரேரா, எஸ்.பி.வைத்திலிங்கம், குஞ்சுப் பொரிசண்முகம், ஏ.எஸ். ஜோன், டி. சாரநாதன், சி.எஸ். சிவனடியான் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும், மலைநாட்டுதமிழ் மக்கள் உரிமைப் போர்த்தளபதிகள் என்ற தலைப்பில் எஸ்.எம்.சுப்பையா, எஸ்.செல்லையா, கே.குமாரவேல், வி.கே.வெள்ளையன், டி.இராமானுஜம், சிவபாக்கியம் குமாரவேல், பி.தேவராஜ், கோகிலம் சுப்பையா, போஸ் (ஆர்.எம்.) செல்லையா, எஸ். நடேசன், கே.சுப்பையா, கே.ஜி. எஸ்.நாயர், எஸ்.மாரியப்பா, எஸ். சோமசுந்தரம் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும் சேர்த்து 'மலையக அரசியல்; தலைவர்களும் தளபதிகளும்' என்ற தலைப்பில் மு. நித்தியானத்தன், எச். எச் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் தொகுத்து வெளியிடுகின்றனர். சி.வியின் இந்த புதிய வரலாற்று ஆவணத்தின் வெளியீட்டு விழா லண்டன் மலையக இலக்கிய மகா நாட்டில் 11 ஜுன் 2022 இல் நடைபெறும்.

மலையக எழுத்தாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களுமான சி.வி. வேலுப்பிள்ளை, கோகிலம் சுப்பையா, இர. சிவலிங்கம், கவிஞர் தமிழோவியன், சாரல் நாடன், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், காத்தாயி ஆகிய ஏழு அரங்குகளில் 25 மலையக எழுத்தாளர்களின் நூல்களின் விமர்சனங்களும் இந்த மாநாட்டில் இடம்பெறுகின்றன. சென்னை தாய் பதிப்பகம் வெளியீட்டின் சார்பில் குமார் ராஜேந்திரன் இந்நூலை பதிப்பிட்டுள்ளார்.




# ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்

## பேராதனை தமிழ்த்துறையின் ஆறாவது சர்வதேசத் தமிழியல் ஆய்வு மாநாடு

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஆறாவது சர்வதேசத் தமிழியல் ஆய்வு மாநாடு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 30, 31ஆம் திகதிகளில், 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் கருப்பொருளில் இடம்பெறவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

"தமிழ்ச் சூழலில் அச்சுப் பண்பாட்டு இயக்கத்திலும் பதிப்புத்துறையிலும் ஈழத்தவர் பணிகள் மகத்தானவை. அச்சு, பதிப்பு ஆகியவற்றினூடு தமிழியல் வரலாற்றைக் கட்டமைப்பதிலும் பாதுகாப்பதிலும் நவீனப்படுதுவதிலும் ஈழத்தவரின் சாதனைகள் முன்னோடியானவை. அச்சியந்திரங்களைக் கொணர்ந்து அச்சியந்திர சாலைகளை நிறுவுதல், ஓலைச் சுவடிகளை அச்சேற்றி நூல்களுக்கு நிலையான ஆயுள் அளித்தல், அச்சிட்ட நூல்களைப் பரப்புவதனூடு அறிவுப் பரவலாக்கத்தை நிகழ்த்துதல் முதலாய செயற்பாடுகளை காலனிய காலத்தில் மேற்கொண்ட ஈழத்து அறிஞர்கள், தமிழ்ப் பதிப்புலகின் கேந்திர தேசமாக ஈழநாட்டை மிளிரச் செய்தனர். 'சீர்பதித்த நற்பதிப்பு மூலவர்' ஆறுமுக நாவலர், 'பதிப்பு உலகின் தலைமைப் பேராசிரியர்' சி.வை. தாமோதரம்பிள்ளை ஆகியோரதும் அவர்களைப் பின்பற்றி இத்துறைசார்ந்து ஈடுபட்டோரதும் பணிகளை ஆராய்ந்து பயன்கொள்வது நமது கடமையாகும்" என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடையும் காலம்வரை, நூல்களை அச்சு வாகனம் ஏற்றிய ஈழத்து அறிஞர், பதிப்பாளர், அச்சுக்கலை நிபுணர் முதலியோரின் பல்வகைப் பணிகள், அவற்றின் வரலாறு மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றை அடையாளங் காணல், அவற்றைச் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் வாசித்தல், அதன்வழி ஆவணப்படுத்தல் ஆகியவை இந்த மாநாட்டுக் கருப்பொருளின் முக்கிய நோக்கங்கள் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தில் அச்செழுத்து, அச்செழுத்து உருவாக்க முன்னோடிகள், அச்செழுத்து வடிவமைப்பு, அச்சியந்திரசாலைகளின் வளர்ச்சி, அச்சுக்கலை நிபுணர்கள், சுவடிகளும் பதிப்புகளும், சமயம்சார் அச்சுப் பதிப்பு வளர்ச்சி, பிராந்திய ரீதியான அச்சுப் பதிப்பு வரலாறு, அச்சுப் பதிப்பு முன்னோடிகள், பதிப்பு ஆளுமைகளும் பணிகளும், சமயம், சமூகம், பண்பாடு சார்ந்த பதிப்புகள், பல்வகை வடிவப் பதிப்புகள், இலக்கணப் பதிப்புகள், இலக்கியப் பதிப்புகள், பாடப் புத்தகப் பதிப்புகள், கலைப் புத்தகப் பதிப்புக்கள், பெரிய எழுத்துப் புத்தகங்கள், பதிப்பு நூல்களில் அலங்கார அமைதி, ஈழத்தவர் தமிழ் நாட்டில் புரிந்த பதிப்புச் சாதனைகள், ஒப்பியல் நோக்கில் பதிப்பு ஆளுமைகள் ஆகிய தலைப்புகளில் அல்லது அவற்றையொட்டியதாக ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பிவைக்குமாறும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆய்வுக் கட்டுரை தமிழ் மொழியிலும், பிரசுரமாகாததாயும் இருத்தல் வேண்டும் என்றும் பாமினி எழுத்துருவில் A 4 தாளில் 10-12 பக்கங்களில் அமைய வேண்டும் என்றும் கட்டுரையின் அமைப்பானது தலைப்பு, கட்டுரையாளர் பெயர், 250 சொற்களில் திறவுச் சொற்களுடன்கூடிய ஆய்வுச் சுருக்கம், ஆய்வுக் கட்டுரை, ஹாவாட் முறை அடிக்குறிப்பு, உசாத்துணை நூற்பட்டியல் என்ற அமைப்பில் அமைய வேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரைத் தலைப்பை 10.06.2022இற்கு முன்னர் itrc2022pera@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் அறிவித்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் 20.07.2022 முன்னர் கட்டுரையை அனுப்பவேண்டும் என்றும் அறிவித்துள்ளது. சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகள் மாநாட்டின் முதல் நாளில் நூலாக வெளியிடப்படவுள்ளது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஶ்ரீ. பிரசாந்தன் தலைமையிலும், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன், விரிவுரையாளர் திருமதி ஆன் யாழினி சதீஸ்வரன் ஆகியோரது ஒருங்கிணைப்பிலும் இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் இலங்கை மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள், துறைசார் புலமையாளர்கள், முன்னணிப் பதிப்பாளர்கள் பங்கேற்கிறார்கள்.



# நடனநிகழ்ச்சி...

கிளிநொச்சி திருநகர் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மறுமலர்ச்சி சனசமூக நிலையக்கட்டடம் திறந்துவைக்கப்பட்ட போது இடம்பெற்ற நடன நிகழ்ச்சி.

(படங்கள்: எஸ். தில்லைநாதன்)



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 28 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.